V 3. NO. 34. 28 1430


5(
N28KN
N30.3.34
189118

259

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
*No. 11*, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3] 1930 வரு ஆகஸ்டு மீ 28உ [No 34

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 661
2. அப்பர் (மல்யுத்தம்)
E.N. தணிகாசலமுதலியார் B.A., B.L. 663
3. மாதவி மாதவம்—(ஆயர்மகளிர் குரவை)
பொ. இராமானுஜன் 665
4. குறுந்தொகை (பாட்டு 131—143)
K. இராமரத்நம் ஐயர் B. A. 666
5. தமிழ்ப்பாடம் (நைடதம்—களன் தூதுப் படலம்) 670
6. கம்பராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்)
T. N. சேஷாசலம் B. A., B. L. 672
7. நம்மாழ்வார் வைபவம் (2ம் பத்து—1ம் தசகம்)
K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. 675
8. வர்த்தமானம் 679

SEP
1891

## கலாநிலயம்

### கலைகளே மானங் காக்கும்

**சட்டசபை** முதலியவைகளில் இடம்பெறுதற்கு ஓட்டெடுத்துக் கைநீட்டித்திரிகின்ற அவலச் செய்கைகளின் இழிவினைக் காட்டினேம். ஏற்கின்ற இழிவுமன்றி இகல்கின்ற கொடுமையும் இதன்பால் பெரிதுளது. 'அபேக்ஷகன்' ஒவ்வொருவனும் ஓட்டுப்பெட்டியினுள் தன்பெயரையே அதிக மதிகமாய்த் துறுத்தவேண்டுமென்ற தூண்டுதலால் பொய்யையே பெரும்பாலும் கொழுகொம்பாக நிறுவிப் படர்த்துகின்ற தற்புகழ்ச்சிக் கொடியினின்று பூத்துக் காய்க்கின்ற கனிகள்தாம் எச்சுவை எப்பயன் உடையவைகளா யிருக்குமென்று எளிதில் உணரலாமே. உண்மைதான் தன் புகழாயினும் அதனைத்தானே எடுத்துரைத்தல் நாணத்தை வேர்கல்லும் வெட்டுப்புழுவினை யொக்கும். சீதையைத் தேடிச்சென்ற அநுமன் அரக்கர்வெள்ளம் வறளும்படி இலங்கையை எரியூட்டிமீண்ட தன் ஆற்றலைப்பற்றி இராமனுக்கு இயம்பநாணிச் சொல்லொன்று முரைக்காமல் நின்றான் என்பர் நம் தமிழ்க்கவியரசு கம்பநாட்டாழ்வார். அக்குரக்கினத் தலைவன் போற்றிய நாணநிலையின் மேன்மையையும் நம் தேர்தல் வீரர்களின் மொழிகளையும் தொழில்களையும் சீர்தூக்கிச் சிந்திப்பார் மனம்'இற்றே இற்றைய மானுடவாழ்க்கை' யென மிகவழுங்கும். மனிதமலர்ச்சியின் (Evolution) தன்மையைப்பற்றி வகுத்துக்கூறும் மேனாட்டு விற்பன்னர் சிலர் குரங்கினிலிருந்துவழிவழிமாறிவளர்ந்து மனிதர்கள்தோன்றினார் என்பர்.'மாநுடனாய் மிகவிளங்கும் யான் பண்டைநாள் வானரவாழ்க்கை மூதாதைகளையோ உடையனாயிருக்கின்றேன்'எனச் சிலர் வெள்கலாம். இது மிகை; ஏனெனின், இக்கால மாநுடத்தொழில்களின் மற்றவைகளை நோக்காவிடத்தும், இத்தேர்தலில் ஊடாடும் காரியங்களைமட்டுமே கருதி, எத்தனை குரங்குகள் "நல்லவேளை; நாமும் மனிதராகாமல் இருக்கின்றோம். பாக்கியம் பெரிதெமக்குளது' என மகிழ்கின்றனவோ, யாரறிவார்.

தன்னுடைய மேம்பாடுரைத்தல் தகவிலாத் தன்மையது. எனின், தேர்தலில் தனக்குப் 'போட்டி'யாக நிற்கின்றவர்களுடைய குற்றங்களைப் பறைசாற்றப் பழகுகின்ற நாவும் அந்நாவிற்குப் பின்னியங்கும் மனமும் தோய்கின்ற தீமையோ கொடிதுகொடிது. தற்போது தேர்தல்முயற்சிகள் மிகவும் விரைவாய் நடந்துவருகின்றன வாகையால் பழிமொழிகள் பிறர்மீது எத்துணையெத்துணை பரப்பப்பெற்றுவருகின்றன வென்பதற்கு உதாரணங்கள் பல நாமெடுத்துக் காட்டவேண்டா. "தீமையே பூண்டொழுகும் சிறுதொழிலாளனவன் இலஞ்சங்க ளிவை கொடுத்தா னிவை வாங்கினான் கடன்பெரிது பட்டுளான்,' என்றென்று மாற்றானைப் பற்றிக் கரிகள்கூறி யொருவன் தூற்றுங்கால், 'ஐய, அவ்வினத்தைச் சேர்ந்த நீதான் பெரிதுத்தமனாதலுண்டோ?' என்றெண்ணி இருவரையு மொருங்கே வெறுப்பதற்கு மிகச் சிறிய அறிவே வேண்டும். பிறரவமானத்தைத் தம்முடைய மானமேபோல் காத்தல் மானிடனென்னும் பெயரிற்குரிய யாவருக்குங் கடன். ஆதலின் மற்றவரைத் தூற்றுவோர்தாம் தம்முடைய மான நிலையையும் உணராதவரென்பது திண்ணம்.

இன்னபடி மானமில்வழியில் மனத்தினைச் செலுத்திப் பழக்குகின்ற புன்மைநெறி கொண்டுய்க்குமிடம் யாவதாகுமெனத் தொடர்ந்து சிந்திக்குங்கால் இந்நிலவுலகில் நிரயமே நேர்ப்படுமோவென நல்லோருள்ளம் அஞ்சாநிற்கும். இனித் தேர்தலுக்கு நிற்பார் பதின்மரெனின் அவர்களுக்குப் பக்கத்துணையாய்ப் பயில்தருவார் பதினாறு பேர்களும், இவர்களுடைய செய்கைகளை ஊக்கமோடு உசாவிவருவார் பல்லாயிரவரும், எல்லாரும் இரத்தலின் இகழ்ச்சிக்கும், பழித்தலின் இழிவிற்கும் பயனில் கருமங்களால் பாழாகுகின்ற உண்மைக்கும் மாறான மனநிலையில் வளர்ந்து, எப்புறம் திரும்பினும் ஆராதலோர் அவாவும், பொய்யும், வஞ்சனையும் தீவினையை மேற்கொள்ளும் கயமையும் உடையராய்க் கடவுளை வறிதே கைகடக்க விட்டுவிட்டுத் தம்மொடு யாவும் பாழாகும்நாட்களை வருந்தியழைக்கும் கொள்கையினராய் முடிகின்றனர்.

இன்னவிதத்தில், மானுடவாழ்க்கையின் மானத்தையெல்லாம் விலையாகக் கொடுத்துவாங்குகின்ற சுகந்தானென்ன? சட்ட சபையால் உருப்பட்டவர் யார்? அங்குச் சென்று வார்த்தை மிகமிகக் குதப்பிக் கொட்டுகின்ற பொருள் யாது. இத் தேர்தல்களினால் விளைகின்ற தீமைக்குத் தம்மை ஆளாக்கிக்கொள்ளாமல் காத்துக்கொள்ள வல்லவர்களாய அறிவினது ஆற்றலும் ஆழமும் ஆன்மாவின் உயர்வையும் உணர்ந்துள்ள ஈரொருவர் இங்குமங்கும் இருப்பவர் தவிர, ஏனைய வெண்ணில்பல்கோடி மாக்கள் அன்னபடி தங்களைக் காத்துக்கொள்ள வியலாமல் இழிவடையச் செய்துவிட்டு, அச் சட்டசபையால் புரிவதாகக் கூறுகின்ற சீர்திருத்தங்களெல்லாம், நிசமாயிருப்பினும் அவைகளின் பயன் எத்தூரம் சென்று யாவர்க்கு எப்பயனை எய்துவிக்க வியலும். அமெரிக்கதேயத்தறிஞர் எமர்ஸன் (Emerson) இயம்பியுள திப்பிய வாசகம் ஒன்றினை எந்நாளும் நாம் மறத்தலாகாது. இவ்வாசகம் அடங்கிய கட்டுரை முழுவதையும் முன் (வால்யூம் 1. 55 பக்கம்) மொழிபெயர்த்துத் தந்திருக்கின்றோம். அவ் வாசகம்மட்டும் பின்வருமாறு:—

எந்த வெந்தக் காலத்தில், எந்த வெந்த ஜனங்கள், எந்த வெந்த விதமான அரசாட்சிக் குடன்படுகின்றார்களோ அந்தவந்த முறை அந்த வந்தக் காலத்தில் அந்தச் சனங்கள் அடைந்திருக்கின்ற மனத்தேர்ச்சியையே பொருந்தியிருந்து அத் தேர்ச்சியின் தன்மையைக் காட்டிவைக்கும் அறிகுறியேயாகும். இருக்கின்ற விஷயங்களை ஞாபகக் குறிப்பாகச் சட்டங்கள் குறித்துவைக்குமே யல்லால் அவை தாமே விஷயங்களின் போக்கை ஆக்கவும் மாற்றவும் முடியாது. ஆதலால், குடிகளின் குணத்தையும், மனவளர்ச்சியையும் பின்பற்றியே அரசியல் தொடர்ந்து வருவது இயற்கையாகும். குடிகளின் குணவளர்ச்சிகளைச் சட்டசபை கட்டியிழுத்துக் கொண்டு முன்போவதென்பது இயலாத காரியம். தேசச்சட்ட நிர்மாணங்களை நாம் அதிகமாய் மதிக்கின்றோம். இது மூடபக்தியே; தேசத்தவர்களுக்கு இருக்கின்ற குணத்தின் அளவன்றி அச் சட்டங்களுக்குச் சக்தியளவு ஏற்படாது. சட்டங்களின் ஜீவனெல்லாம் மனிதர்தம் மனத்தேர்ச்சியேயாகும். "நேற்று நாம் இதுவிது சரியென்று சம்மதித்தோம், ஆனால் இந்தவிதியைப்பற்றி இன்றைக்கு என்னதோன்றுகின்றது உனக்கு" என்று கேட்டவண்ணமாயன்றோ தேசச் சட்டங்கள் எந்நாளும் நிற்கின்றன. பார்க்கப்போனால் சட்டங்களெல்லாம் நாணயங்கள் போன்றவை. அதில் நமது உருவத்தையே முத்திரை குத்தி அனுப்புகின்றோம். அது சிறிது காலத்திற்குள் அடையாளம் தெரியாமல் தேய்ந்துதேய்ந்து போய்விட்டுக் கடைசியில் நாணயச் சாலைக்கே (Mint) திரும்பிவந்து சேர்கின்றது. ............"

இந்த எமர்ஸனது இந்தவாசகத்தினால் யாம் இதுகாறும் உரைத்தவைகளும், யாம் இதுகாறும் உரைத்தவைகளால், இவ்வாசகத்தின் உண்மைப்பொருளும் ஓர்ந்துகொள்வது எளியதாகலாம். முன்னிங்கு உரைத்தபடி சனங்கள் மானநிலை யுணராவகைப் பயிற்றுவித்தபின் அவர்கள் உறுதியுடைய சட்டங்களுக்குரியவர் ஆவது எங்ஙனம். அவர் உரியவராயினாரல்லரெனின் உயரிய சட்டங்கள் பிறப்பதும் இயலாமை புலப்படுவது அருமையன்று. சட்ட சபைகளுக்குச் செல்வோர் செலுத்துவோர் ஆகிய இருதிறத்தவரும் இங்ஙனம் பெருமைக்கு அயலாய முயற்சிகளில் முதிர்ந்து தளர்வாராவதை அறிந்தபின் வித்தொன்றிடக் கனியொன்று காய்க்காதெனும் வாய்மையை நினைப்பதே போதும்.

எல்லாப்படியானும் பயனில்வகையில் மானுடப்பெருமைக்கு மாறாகி உழல்கின்ற இவ்வாழ்க்கையினின்று கரையேறுதற்கோ ரின்றியமையாத் தெப்பமாய் உதவவல்லது சீரிய கூரிய கலையினது உணர்வேயாகும் என்றென்று இக்கலாநிலயம் யாதும் ஐயமின்றி இயம்பிவருகின்றதை நம்முடைய நண்பர்கள் உய்த்துணர வேண்டுகின்றோம்.



# அப்பர்

## அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

### 11. மல் யுத்தம்

[644-வது பக்கத்தொடர்ச்சி]

(i) காலாட் படைக்கு இன்றியமையாக் கலை

காலாட்படையிலுள்ள வீரர்களிற்சிலர் தண்டு, ஈட்டி, வாள், முதலிய ஆயுதங்களையும், வேறு சிலர் வில்லும் அம்பும் கொண்டு போர்முனைக்குச் செல்வது மரபாயினும், நிராயுதனாய்ப் போர்செய்ய வல்லவனே அப்படையிற் சிறந்தோனாவன். அரசர்கள் யானையின் மேலும், குதிரையின்மேலும் போர்செய்யப் பழகியிருந்ததுபோல், ஊர்தியாதொன்றுமின்றித் தரையில் நின்றுகொண்டு நிராயுதராய்ப் போர்க்களத்திற் புறங்கொடாது போர்செய்யத்தக்க தேர்ச்சி, மல்வீரர்களே பழகிப்பழகிப் பெற்றனர். பண்டைக்காலத்தில் வீமசேனன் மல்யுத்தத்திற் சிறந்தவனெனப் பாரதங் கூறும். பெரியாழ்வார் கண்ணனைப் பல்லாண்டு கூறுங்கால் "மல்லாண்டதிண்டோண் மணிவண்ணா!" என்றனர். மல்யுத்தக் கலையின் பயிர்ச்சியால் தோள்கள் மலைகளுக்குச் சமமாய்த் திரண்டுருண்டு நிற்குமெனக் கவிகள் வர்ணிப்பதையுங் காண்க. *

திருஞானசம்பந்தர் சிவபெருமானைப் பாடும் இடங்களிற் சிலவிடத்தில் "மல்லன்" † என்னும் பட்டங் கொடுக்கின்றார். ஏனெனில், சிவபெருமான் தன் திருக்கரங்களால் யானையை‡ உரித்து அதன் தோலைப் பூண்டனரன்றோ? திருநாவுக்கரசரும், பரமன் தோள்வலியையும் அவன் அடியார்க்கருளுந் திறத்தையும் ஒன்று சேர்த்து

வளைக்கை மங்கை நல்லாளை யோர்பாகமாத்
துளைக்கை யானை துயர்படப் போர்த்தவன்
திளைக்குந் தண்புனல் சூழ்திரு வாரூரன் [லோ!
இளைக்கும் போதேனை யேன்றுகோ ளுங்கொ
திருவாரூர் - பண் - கௌசிகம் - 7

என்று வர்ணிப்பதைக் காண்க.

இதன்றியும் காலனை உதைத்த உதையால் அவன் உயிர் துறந்தனன். மற்போரில் தனக்கு இணையாகாதவனை அலட்சியமாய் உதைத்துத்தள்ளல் $ மல் வீரர் மரபேயாம். இதன் கீர்த்தியையே அப்பரும்,

வெம்பனைக் கருங்கையானை வெருவவன் றுரிவைபோர்
கம்பனைக் காலற் காய்ந்த காலனை ஞால மேத்தும் [த்த
உம்பனை யும்பர் கோனை நாகைக்கா ரோண மேய [றே.
செம்பொனை நினைந்த நெஞ்சே திண்ணநா முய்ந்த வா
திருநாகைக்காரோணம்— திருநேரிசை - 6.

என்னும் பாசுரத்தில் விளக்குவதைக் காண்க. மல்யுத்தஞ்செய்து நகத்தால் கீறி இரணியன்தன் உயிரை விள்ளச்செய்த மற்போரிற் சிறந்த நரசிம்மமூர்த்தியான திருமாலாலும் வணங்கப்படுகின்றவர் சிவபெருமான் எனில், சிவபெருமான் மற்போரின் ஏற்றம் விளங்கு மன்றோ?

துங்கநகத் தாலன்றித் தொலையா வென்றித்
தொகுதிறலவ் விரணியனை யாகங் கீண்ட
அங்கனகத் திருமாலு மயனுந் தேடு
மாரழலை யநங்கனுடல் பொடியாய் வீழ்ந்து
மங்கநகத் தான்வல்ல மருந்து தன்னை
வண்கயிலை மாமலைமேன் மன்னி நின்ற
செங்கனகத் திரடோளெஞ் செல்வன் றன்னைச்
செங்காட்டங் குடியதனுட் கண்டே னானே.
திருச்செங்காட்டங்குடி-திருத்தாண்டகம் 2.

ஆகையால் மற்போர் மிகவும் சிறந்ததென்ன முற்காலத்திற் கொண்டாடப்பட்டது. அரசனுக்கும் இது வேண்டியதே. ஏனெனில் அக்காலத்தில் நமதரசர்கள் யுத்தத்திற் புறங்கொடாச் சுத்தவீரர்கள். நிராயுதராய் நின்றகாலை காலாள்போல் நின்று போர்செய்ய இக்கலை அரசனுக்குப் பயன்படும். அதிகாய சூரனை இராவணன் மற்போரில்சிறந்தவனென்ன அப்பர் தேவாரத்திலும் காணலாம்.

மல்லை மல்கிய தோளரக் கன்வலி
நல்ல நல்ல மெனும் பெயர் நாவினால்
சொல்ல வல்லவர் தூநெறி சேர்வரே.
திருநல்லம் - திருக்குறுந் தொகை - 10.

(ii) மற்போரின் ஏற்றம்

மற்போர் ஏனைய போர்த்தொழிலைக் காட்டிலுஞ் சிறந்ததெனப் பண்டைத் தமிழர் ஏன் எண்ணின

---

* நரைகள் போந்துமெய் தளர்ந்து மூத்துட
னடுங்கி நிற்குமிக் கிழவனை
வரைகள் போற்றிர டோளனே யென்று
வாழ்த்தி னுங்கொடுப் பாரிலை
புரைவெள் ளேற்றுடைப் புண்ணி யன்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அரைய னுயமர ருலக மாள்வதற்
கியாது மையுற வில்லையே. சுந்தரர்.

† மல்லன் மும்மதின் மாய்தர வெய்ததோர்
வில்லினா னுறை வேற்காடு
சொல்ல வல்ல சுருங்கா மனத்தவர்
செல்ல வல்லவர் தீர்க்கமே
திருவேற்காடு - பதிகம் - 7.

‡ i அடுத்தானை யுரித்தானை யருச்சுனற்குப் பாசுபதம்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சினமல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை யென்மனத்தேவைத்தேனே
திருக்கச்சியேகம்பம் - பண் - காந்தாரம் - 10.

ii செற்றுக்களிற்றுரி கொள்கின்ற ஞான்று செருவெண் [கொம்பொன்
றிற்றுக்கிடந்தது போலு மிளம்பிறை பாம்பதனைச்
சுற்றிக்கிடந்தது கிம்புரி போலச் சுடரிமைக்கும் [கே
நெற்றிக்கண் மற்றதன் முத்தொக்குமாறொற்றி யூரனுக்
திருவொற்றியூர் - திருவிருத்தம் - 1.

$ அலையார் கடனஞ்ச முண்டார் தாமே
யமரர்களுக் கருள்செய்யு மாதி தாமே
கொலையாய கூற்ற முதைத்தார் தாமே
கோல்வேங்கைத் தோலொன் றசைத்தார் தாமே
சிலையாற் புரமூன் றெரித்தார் தாமே
தீநோய் களைந்தென்னை யாண்டார் தாமே
பலிதேர்ந் தழகாய பண்பர் தாமே
பழனநக ரெம்பிரானார் தாமே.
திருப்பழனம் - திருத்தாண்டகம் 1.

ரென ஆராயுங்கால், அது வீரனது உதாரகுணத்தைக் காட்டுவதாலேயாம். எக்காலத்திலும், தோல்வியடைந்த வீரன் சரணமெனில் அவனைக் கொல்லாது இப்போரில் விட்டுவிடமுடியும். வில்லினின்று அம்பு சாய்ந்தவுடன் எதிரியின் மரணம் திண்ணமாதலால், இப்போரிலுள்ளபடி க்ஷமிக்கும் சமயம் அப்போரில் வாய்ப்பதில்லை.

இதன்றியும் விற்போர் முதலியவைகளில் தந்திரமே பெரும்பாலும் வெற்றிக்குக் காரணம். மற்போர் தோள் வலியாலேயே வெற்றிபெறக் கூடியது. இராமர் காலத்திற் குரங்குகளென வெண்ணப்பட்ட நாகரிகம் குறைந்த தென்னிந்தியர் தோள்வலியினால் பெரும் பாறைகளை வெகுதூரத்திலிருந்து எடுத்துச்சென்று இலங்கைக்குப் பாலங்கட்டியதும், இராம ராவணயுத்தத்தில் மாயப்போரிற் சிறந்த அரக்கர்களைப் பாறைகளை விட்டெறிந்து கொன்றதும் நாம் அறிகின்றோமன்றோ? இராமருடையசேனை முழுவதும் தமது தோள்வலியே படைக்கலமாய்ப் பயன்படுத்தியதும் காண்கின்றோம். இப்போரில், இராமருக்கும் இலக்குமணருக்கும் விற்கலையும், ஏனைய இராம சேனைசமுகத்திற்கு மற்கலையும் தானே பயன்பட்டனவல்லவோ. தென்னிந்திய குடிகளுக்கு மாத்திரமல்லாமல் இலங்கைவாசிகளான இராவணனுள்ளிட்ட அரக்கர் சேனைபதிகளாலும் இம்மல் யுத்தக்கலை பேணப்பட்டதென்பதற்கு அத்தாட்சியாய், அப்பர் இராவணன் கைலாய மலையையெடுக்கப் பிரயத்தனப்பட்டதற்குக் காரணம் * அவன்தோள் வலியேயெனக் குறிப்பிடுகின்றார்:—

மீளாத வாளென்னை யுடையான் றன்னை
வெளிசெய்த வழிபாடு மேவி னானை
மாளாமை மறையவனுக் குயிரும் வைத்து
வன்கூற்றி னுயிர்மாள வுதைத்தான் றன்னைத்
தோளாண்மை கருதிவரை யெடுத்த தூர்த்தன்
தோள்வலியுந் தாள்வலியுந் தொலைவித் தாங்கே
நாளோடு வாள்கொடுத்த நம்பன் றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே.

திருநாரையூர் - திருத்தாண்டகம் 10.

(iii) மற்கலையின் ஒழுங்கு.

நாடகக்கலையில் பதினோராடலெனக் காட்டப்பட்டவைகளில் மல்லாடல் ஒன்று. இது வாணாசுரனை வெல்லுவதற்குக் கண்ணன் மல்லனாய்ச்சென்று அறைகூவி அவனைப்பிடித்து உயிர்போகும்படி நெரித்துத் தொலைத்த ஆடலாம். இதற்கு உறுப்பு ஐந்தாகும் என்பர்.

"நெடியவ னாடிற்று மல்லாடன் மல்லிற்
கொடியா வுறுப்போ ரைந்தாம்"

என அடியார்க்குநல்லார் கூறுவார்.

தீயனகளைந்து, நல்லவை படரச்செய்து செங்கோலோச்சும் மன்னரும், சிவபெருமான்போல் ஓயாமல் தொழிலில் வைகுவர் போலும்.

அடியார்கள் பஞ்சேந்திரிய மல்லில் சிக்குண்டு வதையுறும்பதைத் தடுப்பதே விடாத்தொழிலாக வுடையவர் சிவபிரான்.

அரிச்சி ராப்பக லைவரா லாட்டுண்டு
சுரிச்சி ராதுநெஞ் சேயொன்று சொல்லக்கேள்
திரிச்சி ராப்பள்ளி யென்றலுந் தீவினை
நரிச்சி ராது நடக்கு நடக்குமே.

திருச்சிராப்பள்ளி - திருக்குறுந்தொகை 3.

என்பர் அப்பரும். மற்போரில், முன்னும் பின்னும், மேலுங் கீழும், பக்கமும் இடையும், வேகமும் தாழ்வும், எடுத்தலும் விடுத்தலுமாய் நிகழுஞ் செய்கைகளை மனதிலெண்ணியோ, திருநாவுக்கரசுநாயனார் சிவபெருமானை மிகவும் அரிய இத்திருத்தாண்டகத்தில் உருவகப்படுத்திப் பாடினர்:—

முன்னவன்காண் பின்னவன்காண் மூவா மேனி
முதல்வன்காண் முடிவவன்காண் மூன்று சோதி
அன்னவன்கா ணடியார்க்கு மண்டத் தார்க்கு
மணியவன்காண் சேயவன்கா ணளவில் சோதி
மின்னவன்கா ணுருமவன்காண் டிருமால் பாகம்
வேண்டினன்கா ணீண்டுபுனற் கங்கைக் கென்றும்
மன்னவன்காண் வானவர்கள் வணங்கியேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே.

திருவலிவலம் - திருத்தாண்டகம். 8.

இக்கருத்தையே சுந்தரரும் அத்தலத்தின் பதிகத்தில் குறிப்பிடுவது காண்க.

ஏன்ற வந்தணன் றலையினை யறுத்து
நிறைக்க மாலுதி ரத்தினை யேற்றுத்
தோன்று தோண்மிசைக் களேபரந் தன்னைச்
சுமந்த மாவிர தத்தகங் காளன்
சான்று காட்டுதற் கரியவ னெளிய
வன்றன் னைத்தன்னி லாமனத் தார்க்கு
மான்று சென்றணை யாதவன் றன்னை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே.

* வரைக்க ணாலஞ்சு தோளுடை யான்றலை
அரைக்க வூன்றி யருள்செய்த வீசனார்
திரைக்குந் தண்புனல் சூழ்கரக் கோயிலை
உரைக்கு முள்ளத் தவர்வினை யோயுமே.

திருக்கடம்பூர் - திருக்குறுந்தொகை 10.


ஒட்டக்கூத்தர் பாடிய **தக்கயாகப் பரணி** மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.

(உரையுடன்)

இதுவரையில் அச்சேறாத இவ்வரிய நூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு

விலாசம்:—கலாநிலயம்: 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.




# மாதவி மாதவம்

[647 - வது பக்கத் தொடர்ச்சி]

## 8. ஆயர் மகளிர் குரவையாடியது.

ஆற்றைநாட்பொழுதுபுலரா முன்னரேமாதரிவிரைந்தெழுந்து, அன்று அரசர்கோட்டத்து நெய்யளக்குமுறை தனதாகலின் தயிர்கடையத் தாழி இருந்தவிடத்தேசென்றுபார்க்குங்கால் பால்உறையாதிருக்கக் கண்டு முன்னாள் சேர்த்துவைத்துள்ள வெண்ணெயை உருக்க முயன்றாள். அதுவும் உருகிற்றில்லை. நெஞ்சு துணுக்குற்றாள். முன்றிலிற் பிணித்துள்ள ஆனேறுகள் கண்களில் நீருகாநின்றன. மறிகளோ சோர்ந்து கிடந்தன. ஐயையை யழைத்து "மகளே, இன்று நமக்கும் நம்மினத்திற்கும் வருவதோர் உற்பாதமுண்டு போலும்" என நிகழ்ந்ததுரைத்து, "அது நீங்க ஆயர்பாடியிலே கண்ணன் அன்று நப்பின்னையோ டாடிய குரவைக்கூத் தாடல்வேண்டும்" என வுரைத்துத் தன் மகள் ஐயையொடு வேறுசில மகளிரையும் மண்டலமாக நிறுத்தி, ஒருவர் கையொடு ஒருவர் கைகோத்துப் பின்வருமாறு இறைவனைப்பாடி நடித்தனர்.

"வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாட் கடல்வயிறு கலக் [கினையே
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றாற்கட்டுண்கை
மலர்க்கமல வுந்தியாய் மாயமோ மருட்கைத்தே"

[கடல்நிற வண்ணலே! கமல வுந்தியாய்! முன்பொருநாள் மிகப்பெரிய வடவரையை மத்தாகநட்டு, அரவரசைக் கடைகயிறாகப் பூட்டி, ஆழமும் அகலமும் காண்பதற்கரிய ஒரு பெரிய கடலினையே கலக்குவித்தனையன்றோ? அங்ஙனம் கலக்குவித்தமை நின் சீரிய கைகளே; அந்தக் கைகள் யசோதைப்பிராட்டியாரின் கடைகயிற்றால் கட்டுண்டமை என்ன மாயமோ? இச்செயல் மிகவும் மருட்கை யுடையதாயிருக்கின்றது.]

இதனால் இறைவனது ஆற்றலும், அன்பர்களிடத்தே கட்டுண்ணும் கரையற்ற கருணைப்பெருக்கும் குறிப்பிடப்படுகின்றது.

"அறுபொரு ளிவனென்றே யமரர்கணந்தொழுதேத்த
உறுபசியொன் றின்றியே வுலகடைய வுண்டனையே
உண்டவாய் களவினா னுறிவெண்ணெ யுண்டவாய்
வண்டுழாய் மாலையாய் மாயமோ மருட்கைத்தே"

[மாலையாய்! ஐயமற்ற பொருள்நீ யென்றே கொண்டு அமரர்கணம் உன்னைத் தொழுதேத்தாநிற்க, நீ பசியொன்று மின்றியே உலகடங்கலும் உண்டாய்; அங்ஙனம் உண்ட அவ்வாயே பெரும்பசியால் சிறிய உறியிலுள்ள வெண்ணெயைக் களவினால் உண்டவாயன்றோ! இஃதென்ன மாயம்?]

"திரண்டமரர் தொழுதேத்துந் திருமாலின் செங்கமல
விரண்டடியான் மூவுலகும் இருள்தீர நடந்தனையே
நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி
மடங்கலாய் மாறட்டாய் மாயமோ மருட்கைத்தே"

[திருமாலே! நரசிங்கமாய் இரணியனை யட்டோய்! அமரர் திரண்டு ஏத்தாநிற்கும் நினது செங்கமலம் போன்ற இரண்டேயடியால் மூவுலகமும் இருள்நீங்க நடந்தாய்; அங்ஙனம் இருள்நீங்க நடந்த அவ்வடியே பின்னர்ப் பஞ்சபாண்டவர்க்குத் தூதாக நடந்தவடி இஃதென்ன மாயமோ? இச்செயல் எங்கட்கு மருட்கை விளைவிக்கின்றது.]

இவற்றால் இறைவனது திருவருட்டிறம் செவ்வனே விளக்கப்படுகின்றது.

### கண்ணகி கண்ட கடுந்துயர்.

குரவையாடி முடிந்தபின்னர் மாதரியும், அவள் மகளும், பிறமகளிரும் நீராடி நெடுமாலடியைப் பூ முதலியதூவி ஏத்துதற்கு வையையாற்றிற்குச் சென்றனர். ஆங்கே வேறொரு நங்கை, நகருள்நிகழ்ந்த நிகழ்ச்சியை அவர்கள்பாற் கூறினள். அவர்கள் நெஞ்சழிந்து, துயர்மிக்குத் தடுமாற்ற நடையோடு கண்ணகியையடைந்து, நிகழ்ந்ததைக்கூற நாவெழாது வாயொடுங்கி வாட்டமுற்று நின்றனர். அதுபொழுது, காலையிற் சென்ற கோவலன் மாலைப்பொழுதுவந்தும் வாராமையினால் மனம்வருந்திய கண்ணகி ஐயையைவிளித்துத் "தோழி, என் காதலன் ஏகிய நன்பகற்போதே நடுக்குநோய் கைமிகாநின்றது; அவரோ இன்னும் வந்திலர்; அவரைக் காணாது வாடுமென்னெஞ்சம். அங்ஙனமாக இவரனைவரும் இன்னதென யான் அறியாவகை வாடி நிற்பதேனோ?" என வினவினள். அதுபொழுது ஆங்கிருந்த வொருத்தி, "அன்னாய், அரசமாதேவியின் அணிதிகழ் சிலம்பைக் கவர்ந்தவர் இவரென அரசன் ஆணையால் கொலை குறிக்கப்பட்டார்" என்றனள். அந்தோ! கற்புத்தெய்வம், பொற்பின் செல்வி உற்ற நிலையை யுரைக்க வொண்ணுமோ?

பொங்கி யெழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கள் முகிலோடு சேணிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள்தன் கேள்வனை
யெங்கணாஅ வென்னா வினைந்தேங்கி மாழ்குவாள்.

இங்ஙனம் அழுதனள் புலம்பி, "கதிர்ச்செல்வனே! நீ யறியாததொன் றிவ்வுலகிலில்லை; ஆதலின் நீ யறிய என் கணவன் கள்வனாவனோ?" என்றாள். அவ்வளவில் அவன் அசரீரியாய் நின்று "நின் கணவன் கள்வனல்லன்" என மொழிந்தான். அதுகேட்ட கண்ணகி தன் கொழுநன் கொலையுண்டு கிடந்த இடத்தை வேறு சிலர் காட்ட, ஆயர்பாடி நீங்கி அவணடைந்தாள்.

வண்டா ரிருங்குஞ்சி மாலைதன் வார்குழன்மேற்
கொண்டாள் தழீஇக் கொழுநன்பால் காலைவாய்ப்
புண்டாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க்
கண்டா ளவன்றன்னைக் காணாக் கடுந்துயரம்.

[காலைப்பொழுதின்கண் ஆயர்பாடியிடத்தே தன் கணவனைத் தழுவி, அதற்குக் கைமாறாக அவனுடைய வண்டொலிக்குங் குஞ்சியின் மாலையை வாங்கித் தன் வார்குழன்மேற்கொண்டகண்ணகி, மாலைப்பொழுதின் கண்ணே அவன் மெய்யுடைப் புண்ணின்றுங் குதிக்கின்ற குருதிப்புனல் இடமெல்லாம் நனைப்ப, அவன் தன்னைக் காணாத துயரத்தைத் தான் கண்டாள்.]

"ஆடுங் கூத்தர்போல், ஆருயிர் ஒருவழி: கூடிய கோலத்து ஒருங்குநின் றியலாது, செய்வினை வழித்தாய்

உயிர்செலு மென்பது, பொய்யில்காட்சியோர் பொருளுரை யென்றாம்," தீதுடை வெவ்வினை யுருத்தகாலை, பேதைமை கந்தாப் பெரும்பேதுறுவர்; ஒய்யாவினைப் பயன்உண்ணுங்காலை, கையாறுகொள்ளார்கற்றறிமாக்கள்" எனக்கவுந்தியடிகள் வாய்வைத்தும்உரைத்தஉலக வாழ்க்கையின் உறுபயனுணர்ந்த நம்ஆசிரியர் "ஐயோ! காலையில்தானே தன் காதலியின் கைபிடித்த இவன் மாலையில் தன் கண்ணனையாளைக் கரையற்ற துயர்க் கடலில் ஆழ்த்தி மண்ணுலகு நீத்து மறைந்தனனே" என வாய்விட்டுப் புலம்பும் ஏழையரைப்போல் "காலையில் ஆயர்பாடியில் தன் ஆருயிரனையாளொடு இன்பவுரை பயின்று அன்புடன் தழுவி, அவன் தலையிற் சூடிய மாலையை யெடுத்துத் தன் கூந்தலிற் சூடிக்கொண்ட கண்ணகியார்அந்தோ,அன்றையமாலைப்பொழுதிலேயே அவன்உடல்முழுதுங் குருதிசோரத் தன்னைக் காணவியலாத நிலைமையிலிருந்த கொடிய தோற்றத்தைக்கண்டாள்" எனமொழிந்திருப்பது மாசற்றமணியனைய கண்ணகியின் துயர்நிலையால் தன்னையுமறந்து வந்த பரிவுமொழிகளே யாகும். வெட்டுண்டு இறந்து கிடந்த கணவனைக் கண்டாள் என மொழியவும் இயலவில்லை நம்அடிகளுக்கு.ஆனால்"கண்டாள் அவன்தன்னைக் காணாக் கடுந்துயரம்" எனவேறுவகையில் துயர்ப் பெருக்கை மிகுதிப்படுத்தியுள்ளார். இப்பாவிற்கு எத்துணைதான் விரித்தெழுதினும் அதனையே ஒருமுறை ஓதுவதுபோல் நம்நெஞ்சு இளகாது. "நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும் பெருமையுடைத்திவ்வுலகு" என நிலையாமையை யறிவுறுத்திய முதற் பாவலர் கோவலன் காலத்தவராயின் "காலையிருந்த ஒருவனை மாலைவாய்க் காண்டலரி திவ்வுலகு" என மாற்றிக் கூறியிருப்பர். முற்றத்துறந்த அடிகளே கண்ணகியார் துயரைக்காணத் தரியாது கலங்கினரெனின் நம்போல்வார் நிலையினை உரைத்தல் மிகை. ஆதலின் இந்நிகழ்ச்சியை நீட்டாது குறைத்தலே தக்கது. தன் காதலனைக்கண்ட கண்ணகி அவன்மீது வீழ்ந்தழுது அரற்றினள். என்ன வியப்பு ! இறந்துகிடந்த கோவலன் உயிர்பெற்றெழுந்து, "அந்தோ, முழுமதியனைய திருமுகம் கன்றியதே" யெனக்கூறி அவள் கண்ணீரைத் துடைத்தான். அதுபொழுதப் பெண்ணரசி அவன் இணையடியை வளைக்கையாற் பூண்டு நின்றேங்கினள்.கோவலன் தன்காதலியைத் தேற்றி "ஆருயிரே, சின்னாள் ஈண்டிருந்து பின்னர் எளியேனிடம் வரக் கடவை" யெனக்கூறி விண்ணவரின் விருந்தானான்.

*  *  *

தென்னர் கோமானிடத்துக்
கண்ணகியார் வழக்குரைத்தது.

அதுகண்ட கண்ணகி, "ஆ, இஃதென்னமாயம் ! எனதன்பர் மின்னெனத் தோன்றி மறைந்தனரே ! இனி அவர் யாண்டிருப்பினும் யானவரைத் தேடிச் சென்று கூடுவேன். எனினும், அதற்கு முன்னர் "என் கணவன் தவறிலன்' என்பதை யிவ்வுலகுக் குணர்த்துதல் வேண்டும்" எனக்கூறி, அரசன் கோயிலையடைந்து, வாயில் காப்போரால் அரசற்குத் தன்வரவுணர்த்தி, அவனுணையால் உள்நுழைந்தாள். அவளைக்கண்ட தென்னவன் "மடக்கொடி, நீர்வார் கண்ணை என்முன் வந்தோய், யாரையோ நீ?" என வினவினன். அதற்கவள், "புள்ளுறு புன்கண் தீர்த்தோனண்ட, பெரும்பெயர்ப் புகாரென் பதியே; அவ்வூர் ஏசாச் சிறப்பின் இசை விளங்கு பெருங்குடி மாசாத்துவான்தன் மகனையாகி, வாழ்தல் வேண்டிய ஊழ்வினை துரப்பச், சூழ்கழன் மன்ன, நின்னகர்ப் புகுந்தீங்கு; என்காற்சிலம்பு பகர்தல் வேண்டி, நின்பாற் கொலைக்களப்பட்ட கோவலன்மனைவி கண்ணகியென்பது என்பெயர்" என்றனள். "கள்வனைக் கோறல் கடுங்கோலன்றே?" என்றான் அரசன். "வேந்தே! என்கால் பொற்சிலம்பின் பரல், மணி" யென்றாள் கண்ணகி. "தேமொழி, யாம்உடைச் சிலம்பு முத்துடையரியே; இதோ,நின் கணவன் கையகத்திருந்த சிலம்பு" என அரசன் கூறியதும், கண்ணகி அதனை வாங்கி உடைத்தாள். அதனுள்ளிருந்து மாணிக்கப் பரல்கள் தெறித்து வீழ்ந்தன. அவற்றைக் கண்ணுற்ற அரசன் "பொன்செய் கொல்லன்தன் சொல் கேட்ட, யானோ அரசன், யானே கள்வன்!" எனக் கூறி, அக்கணமே அரியாசனத்து மயங்கி வீழ்ந்து உயிர்விடுத்தான். பாண்டியமாதேவி தன் கொழுநன் இறந்தனன்என அறிந்ததும்,அவள்உயிர் உடலினின்றும் பிரிந்தது. கோவலன் உற்ற கொடுமையினும், இந்நிகழ்ச்சியே யெம் நெஞ்சை மிகமிக வுருக்குவது.

கண்ணகி நல்லாள் விண்ணுலகுற்றது.

அரசனொடு தேவியும் உயிர்நீத்தபின்னரும் கண்ணகியார் மனம் அமைதி பெற்றிலது. தன் கற்புத் தீயால் மதுரையை யெரித்துச் சேரநாடு போந்து, ஆங்கே செங்குன்றென்னும் நெடுவேள் குன்றடைந்து அம்மலைமீதிருந்த ஓர் வேங்கைமர நீழலில் ஈரேழு நாள் தன் கொழுநனைக் குறித்துப் பாடுகிடந்து, பின்னர் வானவூர்தியேறித் துறக்கம் புக்காள்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணமால்-தெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து."

---

# குறுந்தொகை

[655-வது பக்கத் தொடர்ச்சி]

நக்கீரர்] 131 [முல்லை

சேணிடைச் சென்று வினைமுற்றி மீளலுற்ற தலைமகன் கார்ப்பருவ வரவின்கண் தலைமகளை நினைந்து வேட்கை மிகுதியால் வருந்திக்கூறியது.

ஆடமை புரையும் வனப்பிற் பணைத்தோட்
பேரமர்க் கண்ணி யிருந்த வூரே
நெடுஞ்சே ணாறிடை யதுவே ; நெஞ்சே
ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்
தோரே ருழவன் போலப்
பெருவிதுப் புற்றன்றால்; நோகோ யானே?

(உரை). அசையும் மூங்கிலையொத்த, அழகினையுடைய, பருத்த தோள்களையும், பெரிய போர்செய்யுங் கண்களையுமுடைய தலைமகள் (புலம்போடு) இருந்த ஊரோ மிகவும் தூரமான வழியை இடையிலே உடையதாயிருக்கின்றது; எனது உள்ளமோ, மழைபெய்து ஈரந்தங்கிய தருணம்வாய்ந்த பசிய புனத்தைநோக்கி ஒரே ஏரையுடைய உழவனைப் போலப் பெரு விருப்பத்தைக் கொண்டது; ஆதலால் நான் வருந்தக்கடவேனோ?



அமை - மூங்கில். செவ்வி - நல்ல சமயம், தக்க தருணம்; the best and most suitable time for doing any thing. விதுப்பு - விருப்பம், ஆசை. உற்றன்று - உற்றது.

மழைபெய்து உழவேண்டிய பதத்தையுற்றநல்லவயல்களையெல்லாம் அவை ஈரங்காய்ந்து உழும்பதந் தவறிவிடுவதற்கு முன் நன்றாய் உழவிரும்பிய உழவன் ஒரே ஏரினையுடைமையால் அதனைச் செய்துமுடிக்க மாட்டாது வருந்துமாறு, கார்காலம் வந்து நெஞ்சுநெகிழ்ந்து காமமீதூரப்பட்ட தலைமகளை உடனே சென்று மகிழ்வித்துக் கூடுவதற்குப் பெருவிருப்புற்ற தலைமகன், நெடுவழியை விரைவிற்கடந்துசெல்லமாட்டாமையை நினைந்து மனம்நொந்து வருந்தினான் என்க. 'ஓர் ஏர் உழவன்போல' என்றது, ஒருவன் போதுமான துணைக்கருவியின்மையால்தான் செய்யவிரும்பியபெருங்காரியத்தைச் செய்துமுடிக்க மாட்டாமைக்குக் காட்டிய உவமை.

---

சிறைக்குடி ஆந்தையார்] 132 [குறிஞ்சி

'காமம் கடியத்தக்கது; மலையில் வாழும் குறப்பேதையொருத்தியைக்கண்டு காமுற்றுக் கருத்தழிதல் உனது பெருமைக்கு அழகன்று' என்று கழறித்தன்னை யேசிய பாங்கனுக்குத் தலைமகன் அவளது இன்றியமையாமையை எடுத்துரைத்தது.

கவவுக் கடுங்குரையள்; காமர் வனப்பினள்;
குவவுமென் முலையள்; கொடுங்கூந் தலளே;
யாங்குமறந் தமைகோ யானே, ஞாங்கர்க்
கடுஞ்சுரை நல்லா னடுங்குதலைக் குழவி
தாய்காண் விருப்பி னன்ன
சாய்நோக் கினளே மாஅ யோளே.

(உரை). (நான் கண்ணுற்றுக் காதல்கொண்ட நங்கை) இறுகத்தழுவி முயங்கத்தக்கவள்; (கண்டார்) விரும்பத்தக்க அழகினள்; திரண்ட மென்மையான முலையினள்; நீண்டு வளர்ந்த கூந்தலள்; (மேலும்) என்னை எதிர்ப்பட்டபோது பசுவின் (நடுங்குந் தலையையுடைய) நல்ல இளங்கன்று தன் முன்வந்த (பால்சுரந்து) விம்மிய முலையையுடைய தாய்ப் பசுவைக்கண்ட ஆர்வத்தை யொத்த (ஆர்வத்தால்) மெலிந்து சாய்ந்த பார்வையை உடையவளாய் இருந்தாள்; இத்தகைய மாமைநிறத்தவளை எவ்வாறு நான் மறந்து அமைதியுற்றிருப்பேன்?

கவவு-அகத்திடுதல்; ஒன்றினுள் ஒன்றையிடுதல்; enclosing, embracing. கடுங்குரையள்-கடுமையள்; 'குரை' என்பது ஓரசை; 'பெறலருங் குரைத்தே' (ஐங்குறு, 401) என்றாற்போல. ஞாங்கர் - பக்கம், முன்பு; 'ஞாங்கர் வேல் பக்கம், முன்பு, மேலென நான்குமாகும்' என்பது சூடாமணி நிகண்டு. சுரை-பசுவின்முலை; the udder of a cow. 'நடுங்குதலை' என்றது அதன் இளமையை விளக்க. குழவி-கன்று; இப்பெயர் எவற்றுக்குரித்தென்பதைத் தொல்காப்பியம் - மரபியல், 19—23? சூத்திரங்களால் அறிக. 'கடுஞ்சுரை' என்பதைத் 'தாய்' என்பதனோடியைக்க. சாய்-(1) சாய்ந்த (2) மெலிந்த. மாயோள் - மாநிறத்தாள்: மா - பசுமை கலந்த கருநிறம்.

---

உறையூர் முதுக்கண்ணன்சாத்தனார்] 133 [குறிஞ்சி

தலைமகன் தலைமகளை வரைந்துகொள்ளாது பலநாளும் களவிற்கூடிப் பிரியாநின்றுழி, தனது ஆற்றாநிலைமையையும், கழிபெருந்துயருழந்துந் தான் உயிர்துறவாதிருத்தலின் காரணத்தையும் தலைமகள் தோழிக்குக் கூறியது.

புனவன் றுடவைப் பொன்போற் சிறுதினைக்
கிளிகுறைத் துண்ட கூழை யிருவி
பெரும்பெய லுண்மையி னிலையொலித் தாங்கென்
உரஞ்செத்து முள்ளேன், தோழி, என்
நலம்புத் துண்ட புலம்பி னானே.

(உரை). தோழி, புனத்திற்குரியவனது தோட்டத்தில் விளைந்த பொன்னையொத்த (முதிர்ந்த) சிறிய தினைப்பயிரினது, கிளிகள் கதிரைக் கடித்துண்டதினால் கூழைப்பட்ட அடித்தட்டை (சிறு மழைத்தூவலால் காயாதிருந்து பின்) பெருமழை பெய்வதால் கிளைத்துத் தழைத்தாற்போல, என் வலியழிந்தும், (உனது தேற்றுமொழிகளால் ஆற்றியிருந்து தலைமகன் பிந்தி என்னை மணந்துகொள்வான் என்ற நம்பிக்கையால்) எனதுகன்னிநலனெல்லாம் தலைமகனால் கிளைக்கப்பட்டு அழிந்தவருத்தத்துடன், உயிர்தரித்திருக்கின்றேன்.

கூழை - நுனிப்பாகமற்றுக் குறைதல். இருவி - கதிர் கொய்துவிடப்பட்ட தினைத்தாள்; the 'thinai' stalk left after plucking off the ears of corn. நிலை யொலித்தல். நிலைத்திருந்து பின் தழைத்தல்; ஒலித்தல் - தழைத்தல்; இலையொலித்தென்றும் பிரிக்கலாம். நலம்புத்துண்ட - புது நலமுண்ட, என மாற்றிக்கொள்க. புலம்பினான் - புலம்பினோடு

---

கோவேங்கைப் பெருங்கதவனார்] 134 [குறிஞ்சி

வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிந்த தலைமகன் பிரிவுநீட்டித்தவிடத்து ஆற்றாது வருந்திய தலைமகள் தன்னை ஆற்றுவிக்குந் தோழிக்குச் சொல்லியது.

அம்ம வாழி, தோழி, நம்மொடு
பிரிவின் றாயின் நன்றுமற் றில்ல,
குறும்பொறைத் தடைஇய நெடுந்தாள் வேங்கைப்
பூவுடை யலங்குசினை புலம்பத் தாக்கிக்
கல்பொரு திரங்குங் கதம்வீ ழருவி
நிலங்கொள் பாம்பி னிழிதரும்
விலங்குமலை நாடனொடு கலந்த நட்பே.

(உரை). தோழீ, நான் சொல்வதைக் கேட்பாயாக: சிறு குன்றின்மீதுள்ள திரண்ட, நீண்ட காலையுடைய வேங்கை மரத்தின் பூவையுடைய அசைந்தாடுங்கிளையை ஒடியும்படி மோதிக் கற்பாறையைத் தாக்கி ஆரவாரித்து வேகத்தோடு விழும் அருவி, மலையினின்று தரையைச் சேரும் பாம்பைப் போல இறங்கும், விலங்குகளையுடைய மலைநாடனுடன் நான் கூடியதாலுண்டாகிய நட்பு, நம்மைவிட்டு அவன் பிரியாதிருப்பின்,நன்றாயிருக்கும். (பிரிந்தகன்றமையால் தீதாகவே தோன்றுகிறது.)

நம்மொடு - (உருபுமயக்கம்) நம்மின். மற்றில்ல - மன்றில்ல; அசைநிலைகள். பொறை - மலை; குறும்பொறை - சிறுமலை, குன்று. தடைஇய -திரண்ட, பெருத்த. புலம்ப-வருந்த, ஒடியும்படி. கதம்வீழ் - கதத்துடன் விழும். விலங்குமலை - குறுக்கே கிடக்கும் மலை, என்றுமாம்.

---

பாலைபாடிய பெருங்கடுங்கோ] 135 [பாலை

தலைமகன் பிரிவானெனக் கேட்டுத் துயருற்று வேறுபட்ட தலைமகளை ஆற்றுவித்தற்பொருட்டுத் தோழி கூறியது.

'வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்;
மனையுறை மகளிர்க் காடவ ருயிர்'என
நமக்குரைத் தோருந் தாமே;
அழாஅல், தோழி, அழுங்குவர் செலவே.

(உரை). '(பிரிந்து) வினைமேற்சென்ற ஆடவருக்கு உயிராவார் அவர்தங்காதலியராகிய ஒளிபொருந்திய நுதலையுடைய மகளிரே; மனையில் தனித்துறையும் மகளிருக்கு உயிராவார் (அவர்தங்கேள்வராகிய) ஆடவரே'என்று நமக்கு முன் சொன்னவரும் அவரே. ஆகையால், அவர் தாமே தமது செலவினைத் தவிர்வார்; நங்காய் நீ அழாதி.

வினை - தொழில்: மணந்த கிழவன் கிழத்தியைவிட்டுப் பிரிதற்குக் காரணமான வினைகள்; அவை ஓதலும், காவலும்,

தூதுபோதலும், போர்புரிதலும், பொருள்செய்தலுமாம். வாணுதல் - வாள்நுதல், (அன்மொழித்தொகை) பெண். அழாஅல் - அழல், அழாதே: (எதிர்மறைக்கண் வந்த 'அல்'லீற்று வியங்கோள்); 'அழல்' என்பது 'அழால்' என்று நீண்டு, இசைநிறை அளபெடைபெற்று 'அழாஅல்' என்றாயிற்று. அழுங்குதல் - தவிர்தல், ஒழிதல்; செலவு அழுங்குவர் - will desist from going.

மிளைப்பெருங் கந்தனார்] 136 [குறிஞ்சி

*'தக்கோரால் கடியத்தக்கது காமம்' என்று கழறிய கற்றறி பாங்கனுக்குத் தலைமகன் மறுத்துரைத்தது.*

காமம் காமம் என்ப; காமம்
அணங்கும் பிணியும் அன்றே; நுணங்கிக்
கடுத்தலுந் தணிதலும் இன்றே; யானை
குளகுமென் றாண்மதம் போலப்
பாணியு முடைத்தது காணுநர்ப் பெறினே.

(உரை). காமம் காமம்என்று (யாவரும் இகழ்ந்து) உரைப்பர். ஆனால் காமமென்பது (உயிரைக்கொல்லும்) பேயுமன்று நோயுமன்று; உடல் மெலியும்படி அதிகமாதலும், (பின்) குறைதலும் அதற்கு இல்லை; மதங்கொண்ட யானை தன் மதத்தை அடக்கிக்கொண்டு உணவாகிய குளகை மென்று உண்பதும் ஓரழகை உடையது, அதனைக் காண்பாரை அது பெறுமாயின்

அணங்கு - பேய்; அச்சத்தையுண்டாக்கிப் பிறரை வருத்தும் தெய்வமுமாம். நுணங்கி - நுணங்கச்செய்து. குளகு - தழை, புல்லாகிய யானையின் உணவு. ஆள்மதம்போல - மதத்தை அடக்கியாள்வதைப்போல. பாணி - அழகு. மதம் பிடித்த யானை தீனியைத் தின்னும்போது அதனருகே நின்று அதைப் பார்த்திருத்தல் அரிதாகலின், 'காணுநர்ப் பெறின்' என்றான். காமமென்பதை ஒரு பெரிய நோயாகவும், காமத்தாற் பீடிக்கப்பட்டவனை மதம்பிடித்த யானையாகவும் நினைத்து அவனைக் கண்டதும் வெறுத்து, அஞ்சி யாவரும் அகல்கின்றார். மதம்பிடித்த யானை தீனியைத் தின்னும் போது யாரேனும் பார்ப்பாராயின் அதுவும் அழகாகவே தோன்றும். அதுபோலக் காமுகனொருவன் தன் மனதுக்கிசைந்த காதலியுடன் கூடி இன்புற்றிருப்பதும் அழகியதாகவே தோன்றும், என்றான்.

'கடுத்தலும் தணித்தலுமின்றே' என்ற பாடத்துக்கு 'காமமாகிய அ ங்கை (மந்திரத்தால்) போக்கலும், நோயை (மருந்தால்) நீக்கலும் இல்லை' என்றுரைக்க.

பாலைபாடிய பெருங்கடுங்கோ] 137 [பாலை

*இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன் தான் ஒருகாலும் தலைமகளைப் பிரியலாற்றலனென்று தலைமகளுக்குத் தனது பிரிவச்சத்தை உணர்த்தியது.*

மெல்லிய லரிவை,நின் நல்லகம் புலம்ப
நிற்றுறந் தமைகுவெ னாயின் எற்றுறந்
திரவலர் வாரா வைகல்
பலவா குகயான் செலவுறு தகவே.

(உரை). மென்மையான தன்மையையுடைய அரிவையே, நினது நல்ல மனம் வருந்தும்படி உன்னை விட்டகன்று நான் (உயிர்தரித்து) இருப்பேனாயின், (உன்னை விட்டுப்பிரிந்து) நான் சென்ற எனது தகவின்மையால் அறனிலானென்று) என்னை இரவலர் துறந்து என்னிடத்து வாராத நாட்கள் பலவாகுக.

'நிற்றுறந்து......பலவாகுக' என்றது, ''நான் நின் பிரியேன்; பிரியின் உயிர் தரியேன், பிரிந்தும், உயிர்தரித்திருப்பேனாயின், 'நான் அறனல்லாத பாவச் செயல்களைச் செய்வேனாகுக' என்று தலைவியின் மனத்துத் தெளிவுண்டாகும்படி கூறியதாம். இதனைத் 'தெளிவகப்படுத்த' என்னுங்கூற்றுக்கு மேற்கோளாகக் காட்டினர் நச்சினார்க்கினியர்; (தொல்-பொருளதி - களவியல் - 10ம் சூத்திர உரை). தகவு - தகவின்மை (குறிப்பு மொழி); 'தகவால்' என்று மூன்றனுருபு விரிக்க.

'நல்லகம் புலம்பல்' என்றும் பாடம்; அதற்கு நல்ல மனம் வருந்தாதே, என்பது பொருள்.

ஓக்கூர் மாசாத்தியார்] 138 [மருதம்

*வாயில்வேண்டிப் புக்க தலைமகனுக்கு வாயில் மறுத்தமை புலப்படத் தோழி கூறியது.*

மனையுறை கோழிக் குறுங்காற் பேடை
வேலி வெருகின் மாலை யுற்றெனப்
புகுமிட னறியாது தொகுபுடன் குழீஇப்
பைதற் பிள்ளைக் கிளையயிர்ந் தாஅங்
கின்னா திசைக்கு மம்பலொடு
வாரல், வாழியர் ஐய,எந் தெருவே.

(உரை). மனையகத்து உறைவதாகிய குறுகிய காலினையுடைய பெட்டைக்கோழி காட்டுப்பூனையால் மனங்கலங்கி வருந்தக்கண்டு துயருற்ற இளங்குஞ்சுகள் புகலிடம் அறியாது ஒருங்கு திரண்டு கூடிக் கூவுங் கூவுதலைப்போலப் பிறரால் கூறப்படும் துன்பத்தைச் செய்வதாகிய அலரோடு, எமது தெருவின்கண், வாராதி, ஐய.

வெருகு - காட்டுப்பூனை. மால் - மனக்கலக்கம். பைதல் - துன்பம். பிள்ளைக்கிளை - (பண்புத்தொகை) பிள்ளையாகிய சுற்றம். அலர் - கற்புடைய காதலியைத் துறந்து பொருள்விழையும் பரத்தையரைக் காதலித்திருந்தான் என்று தலைமகனைத் தலைவியின் சுற்றத்தார் நிந்தித்துரைக்கும் மொழி.

கோல்லன் அழிசியார்] 139 [குறிஞ்சி

*தலைமகனுக்கு இரவுக்குறி நேர்ந்த தோழி, 'நீ இவ்விடத்து வந்து இச்சைகையைச் செய்க. அதனை அறிந்து நாம் அங்கு வருவோம்' என்று குறியிடமுங் குறியும் உணர்த்தியது.*

கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சலமே;
எம்மில் லயல தேழி லும்பர்
மயிலடி யிலைய மாக்குர னொச்சி
அணிமிகு மென்கொம் பூழ்த்த
மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே.

(உரை). பெரிய ஊர்முழுதும் துயின்றாலும், எங்கள் வீட்டினருகே எழு வீடுக்கப்பாலுள்ள மயிலின் காலடியையொத்த இலைகளையும் பெரிய பூங்கொத்துக்களையுமுடைய நொச்சியின் மெல்லிய கொம்பில் மூதிர்ந்துதிரும் அழகுமிக்க மணியென்று மருளத்தக்க பூவினொலியை நன்றாய் (ஓர்ந்து) கேட்டு நாங்கள் தூங்காது விழித்திருப்போம்; நீ குறியிடம் வந்து செய்யுங் குறிப்புக்களைக் கேட்டு உடனே நாம் அங்கே வருவோம்.

கொன் - பெருமை; கொன்னூர் - பயனற்ற ஊர் என்றுமாம்; கொன் - பயனின்மை.

அச்சம் பயமிலி, காலம் பெருமையென்
றப்பால் நான்கே கொன்னைச் சொல்லே

என்பது தொல்காப்பியம் (சொல்லதி. இடை. 6). 'எழிலும்பர்' என்பதற்கு 'எழில்' என்பதை 'எழில்' என்பதின் விகாரமாக்கி, அழகுபொருந்திய என்றும், 'உம்பர்' என்பதற்கு மேட்டிடம் என்றும் உரைத்தலும் ஒன்று. மயிலடி இலை - மயிலின் பாதத்தைப்போல முக்கவடாய் விரிந்த நொச்சியிலை. குரல்-பூங்கொத்து. மணி-நீலமணி; நொச்சிப்பூவின் நிறம் நீலம். நொச்சியின் பூக்கள் ஊழ்த்து நடுராத்திரியில் உதிர்ந்துவிழுமியல்பின என்பதையும், தலைமகன்



இரவுக்குறியிடம் வருவதை எதிர்பார்த்துத் துயில்கொள்ளாதிருக்குமகளிர் நொச்சிப்பூ உதிர்ந்துவிழும் ஒலியை ஓர்ந்திருக்கும் இயல்பையும் பின்வரும் சான்றோர்வாக்காலுணர்க.

கூடுதல் வேட்கையாற் குறிபார்த்துக் குரனொச்சிப்
பாடோர்க்குஞ் செவியோடு பைதலேன்யானாக.-கலித்—10
நொச்சிப் பூவுதிர் நள்ளிருள் நடுநாள் (கல்லாடம் - 2)
வியலூ ரெயிற்புற நொச்சியி னூழ்மலர் வீழ்தொறெண்ணி
மயலூர் மனத்தொடு வைகினன் யான்—(தஞ்சைவா. 203)

இது முன்னிரவு குறிபிழைத்துச்சென்ற தலைமகன் மறுநாள் வந்து சிறைப்புறத்தானாக, அதனையறிந்த தோழி அத் தவற்றை அவன் உணருமாறு கூறியதுமாம்.

அள்ளூர் நன்முல்லையார்] 140 [பாலை

*தலைமகன் பொருள்வயிற் பிரிந்தவிடத்து ஆற்றாது வருந்திய தலைமகள், தன்னை ஆற்றியிருக்கும்படி வற்புறுத்திய தோழிக்குச் சொல்லியது.*

வேதின வெரிநி னோதி முது போழத்
தாறுசென் மாக்கள் புட்கொளப் பொருந்தும்
சுரனே சென்றனர் காதலர்; உரனழிந்
தீங்கியான் தாங்கிய வெவ்வம்
யாங்கறிந் தன்றிவ் வழுங்க லூரே.

(உரை). வெப்புற்ற முதுகையுடைய ஓணானின் பழைய மரப்பொந்தில் வழிச்செல்வார் பறவையைப் பிடிப்பதற்காகப் பொருந்துஞ் சுரத்திடைக் காதலர் சென்றார்; அக்காட்டின் கொடுமையை நினைந்து மனவுறுதிகெட்டும் நான் இங்கே (வெளிக்காட்டாது) தாங்கிய வருத்தத்தை, இந்த (அலர் தூற்றி) ஆரவாரஞ்செய்கின்ற ஊர் எவ்வாறறிந்ததோ?

வேது - வெப்பம். போத்து - பொந்து என்பதன் விகாரம். அழுங்கல் - ஆரவாரம். 'இவ்வழுங்கலூர்,' 'அழுங்கன் மூதூரலரெழ' (ஐங்குறு, 181, 372) 'ஒலியவிந்தன்று இவ்வழுங்கலூரே' (அகம், 90), 'ஆனுக் கௌவைத்தாகத், தானென்னிழந்ததிவ் வழுங்கலூரே. (நற்றிணை, 36) என்று பலவிடத்து இத்தொடர் பயின்று வருதல் காண்க.

மதுரைப் பெருங்கோல்லனார்] 141 [குறிஞ்சி

*தினைப்புனக் காவல்தவிர்ந்து இற்செறிக்கப்பட்ட தலைமகள் இரவுக்குறிவந்து ஒழுகாநின்ற தலைமகனுக்குவரும் ஏதமஞ்சி, 'இரவுக்குறி மறுத்துப் பகற்குறி நேர்ந்தாற்போல அதையும் மறுத்து வரைவு கடாவுக' என்று தலைமகள் தோழிக்குக் கூறியது.*

' வளைவாய்ச் சிறுகிளி விளைதினை கடியச்
செல்கென் றோளே யன்னை' எனநீ
சொல்லி னெவனும், தோழி? 'கொல்லை
நெடுங்கை வன்மான் கடும்பகை யுழந்த
குறுங்கை யிரும்புலிக் கோள்வ லேற்றைப்
பைங்கட் செந்நாய் படுபதம் பார்க்கும்
ஆரிரு ணடுநாள் வருதி,
சார னாட, நீவாரலோ' எனவே.

(உரை). தோழீ, தலைமகனுக்கு நீ, 'விளைந்த தினையினின்று வளைந்தவாயையுடைய சிறிய கிளிகளை விலக்கி ஓட்டுவதற்காகத் தலைமகளை இனிப்புனத்துக்குச் செல்லும்படி சொல்லிவிட்டாள் அன்னை, என்றும் 'கொல்லையிலே நீண்ட கையையுடைய யானையினது கொடிய பகைமைக்கு (தோற்றழிந்து) வருந்திய, குறுகிய கால்களையுடைய, பெரிய, கொலைசெய்யவல்ல ஆண்புலி இறந்துபடுங் காலத்தைப் (பசியாற்) பசுமையுற்ற கண்ணையுடைய செந்நாய் எதிர்பார்த்திருக்கும், செல்லுதற்கரிய இருள்செறிந்த நடுராத்திரியில் நீ தினந்தோறும் வருகின்றாய். இனி இவ்வாறு வாரற்க' என்றுஞ் சொல்லி அவனை (வரவு விலக்கி) வரைவு கடாவுவாயாயின், அதனால் உனக்கு என்ன குற்றம் உண்டாம் ?

தினை கடிய - தினையினின்று கடிய. என்றோள் - என்றாள்; (வினைமுற்று). எவனும் - என்ன குற்றம் உளதாகும்; என்ன தீங்கு வந்துவிடும். வன்மான் - வலிமிக்க மிருகம்; இங்கு, யானை. பகை - பகைமை. பகையுழந்த - பகைமையால் உழந்த. குறுங்கை - 'கை' யென்றது புலியின் முன்னங்காலை, அவையே பிறவிலங்குகளைப் பிடிப்பதற்கும், அடிப்பதற்கும், கொல்வதற்கும் உபயோகப்படுதலால்; the fore-paws of the tiger. கோள் - கொலை(தொழில்) ஏற்றை - ஏறு; ஐகாரச்சாரியை பெற்று நின்றது. படுபதம் - இறக்குங்காலம். வாரலோ - 'ஓ' அசை. 'என்றாள் அன்னை' எனவும், 'வாரலோ' எனவும் சொல்லின் என்னும், என்று 'உம்மையை ஈரிடத்தும் விரித்துக்கொள்க. யானை, புலி, செந்நாய் முதலிய கொடிய விலங்குகள் திரியுமிடமுங் காலமுமாதலின் 'ஆரிருள்' 'வாரல்' என்றாள் என்க.

கபிலர்] 142 [குறிஞ்சி

*தலைமகன் தனது வருத்தங்கூறித் தோழியை குறையிரந்தது.*

சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇப்
புனக்கிளி கடியும் பூங்கட் பேதை
தானறிந் தனளோ, இலளோ? பானாட்
பள்ளி யானையி னுயிர்த்தெனன்;
உள்ளம் பின்னுந் தன்னுழை யதுவே.

(உரை). நடுராத்திரியில் சேக்கையில் துயிலும் யானை பெருமூச்சுவிடுவதுபோல நான் (இரவெல்லாம் துயிலாது) பெருமூச்செறிந்திருந்தேன்; இருந்த பின்னும் எனது உள்ளம் அவளிடத்ததே ஆயிற்று; சுனையிலுள்ள பூக்களைப் பறித்து மாலைதொடுத்தணிந்து புனத்திடத்துக் கிளியையோட்டும் அழகிய கண்ணையுடைய அப்பேதை இதனை அறிந்துளாளோ, இல்லளோ! யான் அறியேன். நீ இதை அவளுக்குணர்த்தி என்வருத்தத்தைக் களையும்படி உன்னை நான் வேண்டுகின்றேன்.

குற்று - பறித்து (குறு, பகுதி).தொடலை - தொடையல், மாலை. தைஇ - செய்து. பானாள் - பால் நாள், நடுராத்திரி. பள்ளியானை-பள்ளிகொண்டயானை. தன்னுழை-அவனுழை, 'அறிந்தனளோ, இலளோ' என்று ஐயமுகத்தாற் கூறினானேனும்,'அறிந்திலள்'என்றே தான் துணிந்தமை தோன்ற, அவளைப் 'பேதை' என்றானும். பூங்கண் - பொலிவுற்றகண் (பண்புத்தொகை); 'பூவை யொத்த கண்' என இரண்டாம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகையுமாம். 'பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்' (நன்னூல், 200) என்னுஞ் சூத்திரத்தில் 'மென்மையும்' என்ற இழிவு சிறப்பும்மையால், வேற்றுமைப் பொருளில் 'பூக்கண்' என்றே வருமெனக் கொள்க.

மதுரைக்கணக்காயனார் மகனார், நக்கீரனார் } 143 } குறிஞ்சி

*களவொழுக்கத்தினிடையே வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைமகன் பிரிவு நீட்டித்தவழி படரான் மெலிந்து பசப்புற்றுப் பருவரலுழந்த தலைமகளைத் தோழி தேற்றி ஆற்றுவித்தது.*

அழியல், ஆயிழை; இழிபுபெரி துடையன்,
பழியு மஞ்சும் பயமலை நாடன்;
நில்லா மையே நிலையிற் றாகலின்
நல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சிற்
கடப்பாட் டாள னுடைப்பொருள் போலத்
தங்குதற் குரிய தன்றாநின்
அங்கலுழ் மேனிப் பாஅய பசப்பே.

(உரை). நங்காய், நீ வருந்தாதே; பயனைத்தரும் மலை நாடன் பிறர்கூறும் வசைமொழியை மிகுதியாக உடையவனாய் இருக்கிறான்; (உனக்குளதாம் ஏதங்குறித்துத் தனக்கு வரும்) பழியையும் அஞ்சுவான்; ஆதலால் உனது அழகொழுகும் மேனிமீது பரந்த பசப்பு, (செல்வம் இளமை யாக்கை இவற்றின்) நிலையாமையே நிலைபெற்ற உண்மையாகலின் (அவற்றை மதியாது) நல்ல புகழை விரும்பிய அறத்துடன் பொருந்திய மனதை யுடைய ஈகையாளன் கைப்பட்ட பொருளைப்போல, நீங்காமல் இருப்பதொன்றன்று, கடிதின் நீங்குந் தன்மையதே.

இழிபு-இழிவு; வசைமொழி. நயன் - அறம். கடப்பாடு - ஈகை, ஒப்புரவு; 'கைம்மாறு வேண்டாக் கடப்பாடு' என்றார் நாயனாரும். (திருக் - 211). 'அங்கலுழ்; அம்-அழகு, கலுழ்-ஒழுகும் 'வழியும்' இது 'கலிழ்' என்றும் வரும் அங்கலுழ் மாமை' (அகம், 41,96) 'அங்கலிழாகம்', 'அங்கலிழ்மேனி' (ஐங்குறு, 106,174),

'இழிபு பெரிதுடையன்' என்பதற்கு 'இழிவான காதலை மிகவும் உடையன்' என்பாருமுளர். தலைமகளிடத்துத் தலைமகன் கொண்டுள்ள காதலைத் தோழி 'இழிபு' எனக்கூறுவது பொருந்தாமை காண்க. 'நில்லாமையே நிலையிற்று' என்பதற்குப் 'பிரிந்த தலைமகன் சென்றவிடத்து நின்று (தங்கி) விடான் என்பதே நிச்சயம்' என்று நலிந்து பொருள் கோடலும் ஒன்று. புகழ் நல்லறமாகிய ஈகையின் பயனாதலாலும் உலகத்துப் புகழல்லாற் பொன்றுது நிற்பதொன்று இன்மையானும், நல்லிசை' என்றாள். பாய - பரவிய- பரந்த மேனிப்பாய. (எழாம் வேற்றுமைத்தொகை) மேனியிற் பரந்த.

# தமிழ்ப் பாடம் 135.

[ 653-வது பக்கத் தொடர்ச்சி ]

## நைடதம்—நளன் தூதுப் படலம்

உருகுதங் கொழுநர்பா லூடி நீத்தநல்
விரைகமழ் தெரியலு மின்செ யாரமுங்
குருமணிக் கலன்களுங் குலவு வீதிவா
யெரிமணிப் பூணின னிடறி யேகினன். 31.

(உரை). உருகு - காதலால் உருகுகின்ற, தம் - தம்முடைய, கொழுநர்பால் - கணவர்களுடன், ஊடி - ஊடல்கொண்டு, நீத்த - அகற்றி எறிந்த, நல்-நல்ல, விரை கமழ் - வாசனை வீசுகின்ற, தெரியலும்-பூமாலைகளும், மின் செய் ஆரமும் - மின்னல்போல் பிரகாசிக்கின்ற முத்துமாலைகளும், குரு மணிக் கலன்களும் - நிறமமைந்த இரத்தினங்கள் இழைத்த ஆபரணங்களும், குலவு - கலந்து கிடக்கின்ற, வீதிவாய் - குண்டினபுர வீதியின் வழியாய், எரி மணிப் பூணினன்- தழல்போன்ற மாணிக்கங்களிழைத்த ஆபரணங்களை யணிந்த நளமகாராஜன், இடறி ஏகினன்-இடறி இடறிச் சென்றான்.

விரிவுரை:-தம்நாயகர்களோடு ஊடிய மாதர் கோபத்தினால் தம்மீது அணிந்திருந்த நகைகளையெல்லாம் வெறுத்தகற்றி எறிந்துவிட அவை தெருக்களில் சிதறிக் கிடக்கின்றன. ஊடலைத் தணிக்கும்பொருட்டு நாயகர் விளையாட்டாய்ச் சூட்டவரும் பூமாலைகளை அம்மாதர் வெறுத்துத் தெருவில் எறிந்தனர்போலும். விலைபெற்ற இவ்வணிகலன்களைப் பொருளென மதியாது எளிதில் எறிந்துவிடுவதுமன்றி, எல்லார்க்கும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே அவைகளை வாரிக்கொள்வாரும் அந்நகரின்கண் இல்லை. இவ்வண்ணம் வியக்கும்படி செல்வத்தின் மிகுதியைப் பின்னும் மிகுத்துச்சொல்வது வீறுகோளணி ஆகும். மடவார் முலையினின்று வழிந்த சந்தனச் சேற்றினால் வீதியிற்செல்லும் யானைகள் வழுக்கிவிழுமென்று நளவெண்பாவில் மாவிந்தநகரைச் சிறப்பித்திருப்பதும் (1-14) இவ் வீறுகோளணியாம். பொருளால் வருவது இன்பமாதலால், செல்வத்தின் மிகுதியோடு பெரும்பாலும் ஊடல் கூடல் முதலிய இன்பப்பகுதிகளையும் சேர்த்துப் பாடுவார் புலவர். இவ்விடயங்கள் முன்னர் (1-14) உரைக்கப் பெற்றிருக்கின்றன.

குறிப்பு:—உருகு + தம் = உருகுதம்; கமழ் + தெரியல் = கமழ் தெரியல்—இவை வினைத்தொகைகளாதலால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை.

குலவுவீதி—குலவுகின்றவீதி என விரியுமாதலால் இதுவும் வினைத்தொகையே. குலவும் + வீதி, குலவு வீதி என நிலைமொழி யீற்று மெய் கெட்டது என்று எண்ணலாகாது. குலவும் வீதி எனில் அது பெயரெச்சத் தொடராகும். வருமொழிமுதலில் இடையின மெய்வரப் பெயரெச்சத் தொடரில் நிலைமொழி யீற்று மகரமெய் கெடாது.

—

மனங்கவர் வனப்பமை வடிவி னன்றியுங்
கனம்பயில் வாயிலோர் காண்கு றுவகை
சினங்கொள்கூ ரிலையவேற் செம்மல் போதலா
லனங்கனென் றுரைப்பதற் கைய மில்லையே. 32.

(உரை). மனம் கவர் - மனத்தைக் கவர்ந்துகொள்கின்ற, வனப்பு அமை - அழகு அமைந்த, வடிவின் அன்றியும் - அழகினால் மாத்திரம் அன்றி, சினம் கொள் - கோபம் கொண்ட, கூர் - கூரிய, இலைய- இலைகளையுடைய, வேல் - வேலாயுதத்தையுடைய, செம்மல் - மேன்மகனாகிய நளன், கனம்பயில் - மேகங்கள் சஞ்சரிக்கின்ற, வாயிலோர் - (கன்னிமாடத்தின்) வாயிலைக் காப்பவர், காண்குறுவகை - காணுதபடி, போதலால் - (மாலிகாஞ்சனம் என்னும் மந்திரத்தின் பயனால்) போவதால், (அவனை இப்பொழுது) அநங்கன் என்று உரைப்பதற்கு-மன்மதன் என்று சொல்வதற்கு ஐயம் இல்லையே - சிறிதும் சந்தேகம் இல்லையே.

விரிவுரை:—மாலிகாஞ்சன மந்திரத்தை உச்சரித்துக்கொண்டிருக்கும் வரையில் நளன் ஒருவர் கண்களுக்கும் தென்படான். இவ்வண்ணம் இவன் உருக்கரந்து தமயந்தியின் கன்னிமாடத்தைச் சூழ்ந்திருக்கும் மதிலைக்கடந்து உள்நுழைவதைக் கூறுகின்றது இப்பாட்டு. மதிலின்கண் உள்ள கோபுரங்கள் மேகங்கள்சஞ்சரிக்கும்படி ஆகாயத்தையளாவியிருக்கின்றன, என்பதைக் "கனம்பயில் வாயில்" என்னுஞ் சொற்கள் குறிக்கின்றன. அவ் வாயில்காப்பாளர் காணுதபடி நளன் செல்கின்றான். இப்பொழுது அவனுக்கு உருவம் இல்லை. அழகினால் அநங்கனென்று நளனை எப்



பொழுதும் சொல்வதுண்டு. ஆனால் அவ்விருவருக்கும் இதுகாறும் ஒரு வேற்றுமை இருந்தது. அழகினால் ஒத்திருந்தனரேனும் அநங்கனுக்கு உருவம் இல்லை, நளனுக்கு உருவம் இருந்தது. இப்பொழுது அவ்வுருவமும் தோன்றுமற் போனதால், இனி நளனை அநங்கனேஎன்று உரைப்பதற்கு யாதும் ஐயமேனும் இடையூறேனும் இல்லை, என மகிழ்கின்றார் கவி.

அநங்கன் என்பதற்கு அங்கம் இல்லாதவன் என்பது பொருள். சிவபிரான் நெற்றிக்கண்ணால் உடலம் வெந்தழியப் பின் இரதியின் வேண்டுகோளால் உடலின்றி ஆவிமாத்திரம் பெற்றிருக்கும் காரணத்தால் அநங்கன் என்ற பெயர் மன்மதனுக்கு ஆயிற்று. ஆதலால், அநங்கன் என்ற சொல்லிற்கு உருவம் இல்லாதவன், மன்மதன் என்னும் இரண்டு பொருள்கள் இருக்கின்றன. இப்பாசுரத்தில் நளன் உருத்தெரியாதிருக்கின்றானென்ற பொருளிலும், மன்மதன்போன் றிருக்கின்றவன் என்னும் பொருளிலும் பயிலும்படி 'அநங்கன்' என்னும் அவ்வொருசொல் வழங்கப்படும் இது சிலேடை அணி ஆகும்.

சிலேடை யணியன்றி இச்செய்யுளில் தகுதியணியும் இருக்கின்றது. ஒருபொருளின் குணம்செயல் நிலைமை பெயர் முதலியவைகளில் யாதானுமொன்று அதற்குத் தக்கதே யாயிற்று என்று புலமைத்திறந் தோன்ற சாதிப்பது தகுதியணியின் இலக்கணம். இவ்வணியை வடமொழியில் சமாலங்காரம் என்று அழைப்பர். "நளனை இதுகாறும் மன்மதனே என்று புகழ்வர். அவ்வாறு புகழ்வதற்குக் காரணமாயிருந்தது அவன் அழகு. ஆனால், இவனுக்கு உருவம் இருக்கின்றதே, இவனை மன்மதன் என்று அழைத்தல் தகுமோ என்னும் ஐயமும் இதுவரையில் இருந்திருக்கலாம்; இன்றைக்கோ அவ்வுருவமும் மறைந்துவிட்டதால் இனி அப்பெயர் இவனுக்கு முற்றிலுந் தக்கதாயிற்று" என்று சாதிப்பதால் இது தகுதியணி.

சினங்கொள்வேல்—சினங்கொள்ளும் இயல்பு இல்லாத வேலிற்குச் சினங்கொள்ளுந் தன்மையை ஏற்றினார். பகைவரைக்கண்டால் சினங்கொள்பவன் நளன்; அவன்கை வேலன்று. ஆயினும் 'சினங்கொள்' என்னும் அந்த அடைமொழி வேல் என்பதைச் சார்ந்து நிற்கின்றது. வேல் ஏந்தும் சினமுடைய நளன் என்பதற்குப் பதிலாய்ச் சினமுடைய வேல் ஏந்தும் நளன் என அடைமொழியைமாற்றி உரைக்குந்திறமையை ஆங்கிலத்தில் டிரான்ஸ்பர்ட் எபிதேட் (Transferred Epithet: Example - Angry Sword) என்று அழைப்பர். அடைமொழியை இவ்வாறு மாற்றியமைக்கும்மரபு, "வென்றிவேல் மன்னன்" "வீரவில்" "மருண்மாலை" போன்ற தொடர்களில் காணப்படுகின்றதேனும் இதனைக் குறிப்பதற்குத் தக்கபெயர் ஒன்றும் தமிழில் இட்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆகையால் நாம் அதனை அடைமாற்று அல்லது மாற்றடை என்று அழைப்பின்பொருந்தும். அடைமாற்றணி, என அணிகளில் ஒன்றாக இதனைச் சேர்ப்பினும் சேர்க்கலாம்.

—

கண்ணகன் மணிக்கடைக் காவலாளர்தா
நண்ணின ரெவரென வெவரை நாடினுந்
தண்ணறுந் தெரியலான் றன்னை யாமென
வெண்ணிவெம் மடங்கலி னெருத்தங் கோட்டுமால்.

(உரை). கண் அகல்-இடம் அகன்ற, மணிக்கடை-அழகிய வாயிலில் இருக்கின்ற, காவலாளர் தாம்- காவலாளர்கள், "நண்ணினர் எவர் - வருகின்றவர் யார்" என - என்று, எவரை நண்ணினும் - யாரை அணுகிக் கேட்டாலும், தண் நறும் தெரியலான் - குளிர்ச்சியும் வாசனையும் அமைந்த மாலையை அணிந்த நளன், தன்னை ஆம் என எண்ணி - தன்னையே அவர் வினவுகின்றனர் என்று எண்ணி, வெம் மடங்கலின்-கொடிய சிங்கத்தைப்போல, எருத்தம் கோட்டும் - கழுத்தைத் திருப்பிப் பார்ப்பான்—(ஆல் - அசை).

விரிவுரை:-மாலிகாஞ்சன மந்திரத்தின் உதவியால் வாயிற்காப்பாளர் காணுவண்ணம் கன்னிமாடமதிலைக் கடந்து நளன் உட்புறமுள்ள நந்தவனத்தின் வழி ஏகுகின்றான். வாயிற்காப்பாளர் தம்முறைப்படி "யார் அங்கு ஏகுகின்றார், யாரங் கேகுகின்றார்" என்று வாயிலினயல் நண்ணுவோரை உரப்பி வினவும்சொற்கள், நளன் செவிக்கு எட்டுமளவில், குற்றமுள்ள நெஞ்சனாதலால், தன்னுரு மறைந்திருக்கின்ற தென்பதை மறந்து, தன்னையே உரப்புகின்றனர் என்று எண்ணித் திரும்பிப்பார்த்துப்பின் அவர் வேறுஎவரையோ விளிக்கின்றன ரென்பதுணர்ந்து முன்னேகுவான் இவ்வண்ணம் பன்முறை நிகழ்ந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு:-காவலாளர்தாம் + நண்ணினர் = காவலாளர் தாநண்ணினர்-நிலைமொழியீற்று மகரமெய் வருமொழி முதலில் நகரம்(மெல்லினம் வரக்கெட்டது) (3-631).

வெம்மை + மடங்கல் = வெம் + மடங்கல் = வெம்மடங்கல். வெம்மையென்ற பண்புப்பெயர் விகாரப்பட்டு 'வெம்' என்னும் நிலைமொழியாய் நிற்கின்றது. இது தனிக்குறிலொடு சேர்ந்த மகரமெய்யை ஈற்றில் உடையதாதலால், அம்மகரமெய், வருமொழிமுதலில் மகரமெய் வரக் கெடவில்லை. (3—631).

### இலக்கணம்.

189118

C. மகரமெய்யீறு (தொடர்ச்சி)

III மகரமெய்யீறு + வல்லின மெய்ம்முதல்.

வல்லினமெய் ஆறினில், மொழிக்குமுதலில் வருவன, ககர சகர தகர பகரங்களே. நிலைமொழியிறுதியில் மகரமெய்யும் வருமொழிமுதலில் வல்லினமும் வருமாயின், சிலபோது அவை, மரம் + காடு = மரக்காடு, என ஈற்று மகரமெய்கெட வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தும், சிலபோது, மனம் + கவர்ந்தான் = மனங்கவர்ந்தான், என நிலைமொழி யீற்று மகரமெய் வருமொழிமுதல் வல்லினமெய்க்கு இனமாய்த்திரிந்தும், ஓடும் + பாம்பு = ஓடும்பாம்பு என விகாரம் இன்றி இயல்பாயும் புணரக்கூடும். எப்பொழுது கெடும் என்றும், எப்பொழுது திரியும் என்றும், எப்பொழுது இயல்பாயிருக்கு மென்றும் காண்போம்.

(a) வருமொழிமுதல் உயிரேனும்(2—673), இடையினமேனும்(3-652), எவ்வெத்தொடர்களில் நிலைமொழியீற்று மகரமெய் கெடுமென்று முன்னர்க்காட்டியிருக்கின்றோம். அத்தொடர்களிலெல்லாம், வருமொழிமுதலில் வல்லினம் வரினும் நிலைமொழி யீற்று மகரமெய் கெடும் என்று கொள்க. ஆனால், வல்லினம் வருமொழிமுதலில் வருமெனின், நிலைமொழியீற்று மகரமெய் கெடுவதுமல்லாமல் வருமொழி முதல் வல்லினமெய்யும் மிகும்:—

ஆதலின் பின்வரும் தொடர்களில் மாத்திரம் நிலைமொழியீற்று மகரமெய் கெட்டு வருமொழிமுதல் வல்லினமெய் மிகலாகின்றது.

(1) ஆறும் வேற்றுமைத் தொகை:—

மரம் + கிளை = மர + கிளை = மரக்கிளை.

பழம் + சாறு = பழ + சாறு = பழச்சாறு.

கமலம் + தண்டு = கமல + தண்டு = கமலத்தண்டு.

முகம் + பொலிவு = முக + பொலிவு = முகப்பொலிவு

குறிப்பு:—நிலைமொழி வினையாலணையும்பெயராய் இருக்குமாயின் வருமொழிமுதலில் வல்லினம்வர 6-ம் வேற்றுமைத் தொகையிலும் நிலைமொழியீற்று மகரமெய் கெடாமல், அவ் வல்லினமெய்க்கு இனமான மெல்லின மெய்யாகத் திரியும்.

சிறியேம் + குறை = சிறியேங்குறை.

கண்டேம் + சிறப்பு = கண்டேஞ் சிறப்பு.

ii நிலைமொழி குறிலொடு சேர்ந்த மகரமெய்யை யீற்றிலுடைய இரண்டெழுத்துச் சொல்லாயின், வருமொழிமுதலில் வல்லினம்வர, 6-ம் வேற்றுமைத்தொகையிலும் நிலைமொழியீற்று மகரமெய் கெடாமல் அவ் வல்லினமெய்க்கு இனமான மெல்லின மெய்யாகத் திரியும்.

எம் + கண் = எங்கண்

நம் + சிரம் = நஞ்சிரம்

தம் + தலை = தந்தலை

(2) மற்ற வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகைகள்:—

வேழம் + பொறி = வேழப்பொறி—2-ம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை.

தங்கம் + கலன் = தங்கக்கலன்—3-ம் வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்க தொகை.

குலம் + கொடை = குலக்கொடை (குலத்திற்குரிய கொடை), 4-ம்வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை.

இரணம் + சோரி = இரணச்சோரி (இரணத்திலிருந்து வரும் சோரி (சோரி - இரத்தம்) 5-ம் வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்க தொகை.

குளம் + தாமரை = குளத்தாமரை—7-ம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை.

3. பண்புத் தொகை:—

வலம் + புறம் = வலப்புறம், வலமாகிய புறம்.

அசோகம் + தரு = அசோகத்தரு.

நீளம் + செவி = நீளச்செவி.

ஆழம் + கிணறு = ஆழக்கிணறு.

குறிப்பு:—செம்மை, வெம்மை, முதலிய பண்புப் பெயர்கள் விகாரப்பட்டு, செம் வெம் என நிற்கும் போது வருமொழிமுதலில் வல்லினம்வர, இந்நிலைமொழியீற்று மகரமெய் கெடாமல், வருமொழிமுதல் வல்லினமெய்க்கு இனமான மெல்லின மெய்யாகத்தான் திரியும்.

வெம்மை + சிலை = வெம் + சிலை = வெஞ்சிலை.

செம்மை + கதிர் = செம் + கதிர் = செங்கதிர்.

இவை, வெம்மை யாகிய சிலை, செம்மையாகிய கதிர் என விரியுமாகையால் பண்புத்தொகைகள்.

4. உவமைத் தொகை:—

கமலம் + தாள் = கமலத்தாள்.

தரளம் + பல் = தரளப்பல்.

மேகம் + குழல் = மேகக்குழல்.

குறிப்பு:—கமலம் + பாதம் = கமலபாதமென, ஈற்று மகரமெய்மாத்திரம் கெடும். நிலைமொழி வருமொழி ஆகிய இரண்டும் வடமொழிகள் ஆதலால் வருமொழி முதல் வல்லினமெய் மிகாது. (3-490).

(b) பின்வருந் தொடர்களில், நிலைமொழியீற்று மகரமெய், வருமொழிமுதலில் ககர சகர தகரங்கள் வர, கெடாமல், முறையே அவ்வல்லினமெய்களின் இனமாகிய ஙகர ஞகர நகர மெய்களாகத் திரியும்.

மரம் + சாய்ந்தது = மரஞ் சாய்ந்தது—எழுவாய்த் தொடர்

ஓடும் + குதிரை = ஓடுங்குதிரை—பெயரெச்சத் தொடர்

விளையும் + தீமை = விளையுந்தீமை—வினைமுற்றுத் தொடர்

சொல்லினும் + கேளான் = சொல்லினுங்கேளான்—வினையெச்சத்தொடர்

பானையும் + சட்டியும் = பானையுஞ்சட்டியும்-இடைச்சொற்றொடர்.

நிலம் + தந்தான் = நிலந்தந்தான் — 2-ம் வேற்றுமைத்தொகை.

அரவம் + கடிக்கப்பட்டான் = அரவங்கடிக்கப்பட்டான்—3-ம் வேற்றுமைத் தொகை.

சுந்தரம் + தம்பி = சுந்தரந்தம்பி (சுந்தரம் என்பவனுக்கும் தம்பி)—4ம் வேற்றுமைத் தொகை.

துயரம் + தீர்ந்தேன் = துயரந்தீர்ந்தேன் (துயரத்திலிருந்து தீர்ந்தேன்)–5-ம்வேற்றுமைத் தொகை

நிலம் + சாய்ந்தான் = நிலஞ் சாய்ந்தான்—7-ம் வேற்றுமைத் தொகை.

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[656-வது பக்கத் தொடர்ச்சி]

உவகையும் வெகுளியு முறுதற் கோண்ணுமோ

சுல்கப்பிரதிஞையின் உண்மையை வான்மீகர் விசதமாக்கினரென்பதை விளக்குகின்றாரல்லது ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார், அந்தச் சுல்கப்ரதிஞையை நிறைவேற்றுந் தூயகருத்தினாலே கைகேசி கூனியின் சூழ்ச்சிக்கு இணங்கி யொழுகினளென்றம்மாமுனி குறிப்பாலேனும் வெளிப்படையாகவேனும் உணர்த்தியிருக்கின்றாரெனத் தம்நூலின்கண் எங்கும் காட்டிவைக்க முயன்றிலர். "கெடுத்தொழிந்தனை" என்ற துவக்கத்துச் செய்யுளிற்கு அவர் கூறும் உரையினால் எய்துமளவு குறிப்புக்கூட வான்மீகத்திலில்லை. ஒன்றையும் மறைக்க வேண்டுமென்ற நோக்கமில்லா வான்



மீகர் கூனியைப் பலபடப் பேசவைக்கின்றாராயினும், அவள் சுல்கப்பிரதிஞையை நினைவூட்டினாளென்றேனும், வாய்மைதான் மன்னவன் இகவாது காத்தற்கே அவ்விருவரங்களையும் கைகேசி கேட்கத்துணிந்தளென்றேனும் உரையாமைக்குக்காரணம் உணர்வது அருமையாகின்றது. மற்று, முனிவரர்கருத்து அது அல்லாமையே உரையாமைக்குக் காரணமென எண்ணற்குரிய கரிகள் சிலவுள.

வனத்தினின்று மீண்டுவந்து அரசினில் வைகுமாறு வேண்டிய பரதனுக்கு இராமன், "உடன் பிறந்தவனே, முற்காலத்தில் உனது தாயாரை நமது பிதா விவாகம் செய்துகொள்ளும்பொழுது, உனது பாட்டனாரிடம் தனது ராஜ்யத்தைக் கன்யா சுல்கமாகப் பிரதிஞை செய்துகொடுத்தார்" என்று உரைத்ததாலும், அதற்கேற்கத் தயரதன், பட்டாபிடேகத்திற்கு முன் இராமனை விளித்து, "என்றைக்குப் பரதன் அவன் மாமன்வீட்டுக்குப் போனானோ அன்றுமுதல் உன்பட்டாபிஷேகத்திற்குத் தக்ககாலம் என்பது என் கருத்து" என்று பரதனது அற்றத்திற்குத் தான் காத்திருந்தமையைத் தெரிவித்ததாலும், இதுபோன்ற மற்றுஞ்சில நிகழ்ச்சிகளாலும் வான்மீகமுனிவர், சுல்கப்பிரதிஞையை ஒளியாது உரைத்துநிற்கக் கம்பரோ முதநூலின் வாய்மையைப் போற்றுங் கருத்தினராயினும், இதனால் தயரதன் கீழ்மை மேலேயெழுந்து தோன்றுமாதலின், "வீரவைணவ தயரதபக்தர் உளம் உளையாவாறு வெச்சென்று உரையாமல் இடக்கரடக்கி, கார்ப்புச்சொல் ஓம்பி, அறியுநர் அறியுமாறு தசரதன் காதற்றவறும் கைகேயி கற்புமேம்படு காதலுங் காட்டி, வான்மீகர் வாய்மையைப் போற்றிப் போந்தார்" என்று பாரதியார் சாதிக்கின்றனர். முன்னும் பின்னும் இவ்வண்ணம் வெளிப்படையாய் விளம்பிய வான்மீகிமுனிவர், கூனியின்மொழியில் இக்குறிப்பை ஒருசிறிதும் அமைக்காதது மன்றிக் கைகேசியும் அரசனது அறத்தை ஓம்பும்பொருட்டே இப்பழியை மேற்கொண்டாளென்று அவள் மொழியிலும் ஒருசிறு குறிப்பேனுங் காண்பதரிது. எவ்வாற்றாலும் கொழுநன் மேன்மையைக் காக்கவேண்டுமென்பது அவள்கருத்தாயின், "ஐயோ, இக்கட்டுடைய இந்நிலைக்கு என்செய்வேன். மன்னனது ஆசையெல்லாம் நசிக்கவும், என்னருமை இராமன் இடர் பெரிதெய்தவும், மாயா வன்பழி யான் பூண்டேனென்று உலகமும் உற்றாரும் மதித்தென்னை இகழவும் நேரவோ யான் பிறந்தேன்" என்று மாழ்குவதன்றோ கைகேயிக்கு அந்நிலையில் இயற்கையாகும். இதற்கெதிர் வான்மீகி முனிவரோ, இராமன் அரசெய்தினால், "நீங்களும் உங்கள் குமாரராகிய பாதரும் மிகவும் இழிவான வெகுவித அவமானங்களை அடையப்போகின்றீர்கள் என்பது நிச்சயம். பரதர் அழிந்து போனார் என்பது திண்ணம். ஆகையால், நீங்கள் இப்பொழுது தீர்க்காலோசனை பண்ணிப்பாருங்கள். உங்கள் குமாரரை உடனே முடிசூட்டிவைக்க வழிதேடுங்கள். உங்கள் சத்துருவைக் காட்டுக்கனுப்பும் வழிதேடுங்கள்" என்று வற்புறுத்தி மந்தரை முடித்த மொழிகளைக் கேட்ட கைகேசி, "தனக்கு வந்த கோபத்தால் முகம் துடிதுடிக்க வெகு உஷ்ணமாகப் பெருமூச்சுவிட்டு மந்தரையைப்பார்த்து, 'இன்றைத்தினமே இராமனை இவ்விடத்திலிருந்து சீக்கிரமாகக் காட்டுக்கு நான் அனுப்பிவிடுகின்றேன். எனது புத்திரனை பரதனுக்கே இளவரசுப்பட்டம் இதோ சூட்டிவைக்கின்றேன். எவ்வித உபாயத்தால் இவ்விரண்டையும் எளிதிற் செய்துமுடிக்கலாம்? இராமன் ஒருபொழுதும் இராச்சியத்தை அடையக்கூடாது, பரதனே அடையவேண்டும்; ஆலோசித்துப்பார்' எனப் பேராசையின் விரிந்தசிந்தையால் அவள் வெஃகியும், அதற்கிடையூறென்று நின்றவர்பால் வெகுண்டும் நிகழ்ந்ததோர் தன்மையை மறைக்காமற் வான்மீகிமுனிவர் புகல்கின்ற வாக்கியங்களை மறத்தலாகாது. "வீர வைணவ தசரத பக்தர் உளம் உளையாவாறு" கம்பர்தான் 'அறியுநர் அறிக' வென்று மறைத்துரைத்தாரெனின், வால்மீகர் கூனியைக் கொண்டேனும் கைகேசியைக்கொண்டேனும் அக்கருத்தை உரைத்திடா திருந்ததற்குக் காரணம் என்? அல்லாமலும், கைகேசியின் மனநிலையை வெகுளியில் நிறுத்தியதினால், அவள் யாதுமோர் தூய கருத்தினால் துளங்கினாளல்லள் என்பதே வான்மீக முனிவரது கொள்கையாக இருத்தல்வேண்டுமென எண்ண இடமுளது. கற்பின் பெருந்தகைமையால் தன் கணவன் வாய்மைப்பண்பைக் காக்கநினைப்பவள் கடுஞ்சினங்கொள்ளல் எவ்வகையில் இயல்பாகுமென்றறியஇயலவில்லை. "முதன்மணிப் புதல்வன்பால்மூண்டதோராதரவால் என்னொடுஎன்மைந்தன் பரதனையும் வஞ்சிக்கநினைந்தனனே இம்மன்னன்','என்றெண்ணி வெகுண்டிராள் திண்ணம், கற்புடையவள்; கணவன்பால் கழிபெருங்காதலுடையவள் இவள் என்று பாரதியார் ஒவ்வுகின்றார். எனின், தன் தலைவனைக்குறித்துப் பரிவாளல்லது கற்பின்வைப்பாய கைகேயிவெகுளியோ கொள்ளமாட்டாள்.

இவ்வண்ணம் கொடும்பகை தனக்கு இராமனெனச் சீறியெழுந்து அவனைக் காட்டிற்கனுப்பும்வழியாதென மந்தரையை வினவலும் அவள் வரமிரண்டையும் கையாளும் உபாயத்தால் அதனைச் சாதிக்கலாம்என்று கூறக்கேட்ட கைகேசியின் தன்மையை வான்மீகிமுனிவர்,

> " இவ்விதமாகத் தீமையை நன்மையென்று போதித்த மந்தரையின் சொல்லைக்கேட்டு, கைகேயி, வெகு சந்தோஷமும் ஆச்சரியமும் அடைந்து, தப்பான வழியிற் செல்லும் ஒரு பெண்குதிரையைப் போன்று தப்பானவழியிற் செல்பவளாயினள்"

என்று காட்டுமிடத்தும், தூயநினைவுகளால் கைகேயி தூண்டப்பெற்றாள்என்று அம்முனிவர் கருதினாரலர் என்பது வெளிப்படை. தீமையை நன்மையென்று தப்பான வழியிற்செல்கின்றாள் எனக்கூறியபின் வான்மீகர் கருத்தைப்பற்றிய ஐயம் எழுவதற்கு இடமேயில்லையே. மயில் அன்னம் பிடி அனையவைகளே மாதருக்கு உவமையாகும் தமிழ்மரபிற் பயின்றவர் மனம் இப் பெண்குதிரைஉவமையால் துண்ணெனச் சிறிது துளங்கலாம். ஆயினும், தீமையை நயந்துசெய்யத்துணிந்த இக்கைகேசியின்பால் விளைந்ததோர் வெறுப்பினால் வான்மீகிமுனிவர், 'பெண் கழுதை' என்பதற்கு எடுத்தவாயின் இடக்கரையடக்கிப் பெண் குதிரையாக மாற்றினாரோவென் றாகிக்கவேண்டா. ஏனெனில், சிறிதுபின்னர் இவள் "கின்னரிப்பறவைபோலச் சுருண்டு கிடந்தாள்" என்பார் அவர். இதுவுமன்றி, தன்மனை நோக்கிவந்த இராமனை, "ஒரு பெண்குதிரை தனது இளங்குட்டியைக் கண்டாற்போல், வெகு சந்தோஷத்துடன் கோசலை எதிர்கொண்டாள்" என்ப

தால் மாதர் பெண்குதிரையும் ஆவது வடமொழி உவமையின் மரபுபோலும்.

உவமைபால் கைகேசி யாவதேயாயினு மாருக; உரையினு லவள் ஒருபோதும் உயர்ந்தவளாகமாட்டாள். உபாயம் உரைத்த கூனியைக் கைகேசி பின்வருமொழிகளால் புகழுமாறு அசைக்கின்றார் முனிவரர்:-

"கூனி, நீ இவ்வளவு சாமார்த்தியமுள்ளவள் என்பது இதுவரையில் எனக்குத் தெரியாது. இவ்வளவு தூரம் என் க்ஷேமத்தை நீ எண்ணியிருப்பதும் எனக்குத் தெரியாது. இவ்வுலகத்திலுள்ள கூனிகளில் புத்தியால் நிச்சயித்தறியவல்ல உத்தமமான கூனி நீதான். எனது காரியத்தில் நீ ஒருத்திதான் எப்பொழுதும் நன்மையையே தேடிக்கொண்டு இடைவிடாது கவலைகொண்டவளாக இருக்கின்றாய். நீ சொல்லாவிடின் இவ்விஷயம் என்னால் அறியமுடியாது. உலகத்தில் வெகு கெட்ட குணமுள்ளவர்களாகவும் அவலக்ஷணங்கள் பொருந்தியவர்களாகவும் பல கொடிய கூனிகள் இருக்கின்றார்கள். நீயோ, வெகு அழகுள்ள ஒரு தாமரை காற்றால் ஒரு பக்கம் வளைந்துநிற்பதுபோல், உனது கூனல் அழகியவளாக விளங்குகின்றாய். உனது மார்பு, தோளுடன் பகைகொண்டு உயர்ந்திருக்கின்றது. கொப்பூழையுடைய வயிறு, உனது மார்பின் உயர்ச்சியைப் பார்த்து வெட்கங்கொண்டதுபோல், இளைத்திருக்கின்றது. உனது முகம், பூர்ண சந்திரன்போல் எவ்வளவு பிரகாசமாக இருக்கின்றது! முழந்தாளோ மிகவும் அழகுடன் விளங்குகின்றது. இரண்டு கால்களும் நீண்டிருக்கின்றன. நீ, வெண்பட்டாடையை அணிந்து, அழகாக என் முன்னே நடக்க நான் பார்க்கும்போதெல்லாம் ஒரு சிலாக்கியமான இராஜஹம்ஸப்பேடு போன்று தோன்றுகின்றாய். நீ, அசுரர்க்குத் தலைவனான சம்பராசுரனைவிட அதிகமாயைவல்லாய். தேரினது கோணம்போல் உயர்ந்து தோன்றும் இக்கூன், புத்திகளையும் அரசவித்தைகளையும் மாயைகளையும் அடக்கிக்கொண்டிருக்கின்றது. இராமன் காட்டிற்குப்போகப் பரதன் பட்டமடைந்தவுடன், நான், ஆணிப்பொன்னாற்செய்த மாலையை உன் கூனிற் சூட்டுகின்றேன். என்னுடைய காரியம் கைகூடினதும், களிப்போடு உனது கூனுக்கு நான் சந்தனம் பூசுகின்றேன். உனது முகத்துக்கு அழகிய குற்றமற்ற பொற்றிலகத்தையும் கழுத்துக்கு மிக நல்ல அணிகளையுஞ் செய்து இடுகின்றேன். நீ, இவைகளை யெல்லாம் அணிந்துகொண்டு நல்லபட்டாடைகளை உடுத்து ஒரு தேவதைபோல் என் கண்முன்பாக உலாவிக்கொண்டிருப்பாய். சந்திரபிம்பந்தானோ என்று எல்லாருஞ் சந்தேகிக்கும்படியான முகத்துடன் விளங்கிக்கொண்டு நீ சத்துருக்களைப் பார்த்துச் செருக்குற்று நடக்கப்போகின்றாய். என்னிடத்தில் நீ ஊழியம் செய்வதுபோல, அனேக கூனிகள், பட்டாடைகளையும் ஆபரணங்களையும் தரித்துக்கொண்டு உனக்குப் பணிவிடை செய்வார்கள்"

இத்தனையும் பரிகசமென்றாலும் "மிகைமிகை" என நகைத்தல் வேண்டும். பெண்குதிரைபோன்ற கைகேயி, உள்ளமும் புறமும் கோடிய அக்குரூபத்தை இராஜஹம்ஸப்பேடாகக்கண்ட இவ்விபரீதம் மிகக்கொடிது. தீமையாற் பொசுங்கிய மந்தரையின் 'மூஞ்சி'யில் பூரண சந்திர பிரகாசம் கைகேயின் கண்முன் புலப்பட்டதென்றால் வேறோர் இந்திரசாலம் எங்குளது. தாமரைபோல் வளைந்து நிற்கின்றதாமே அவள் கூன்! புத்தி வித்தை மாயை அத்தனையும் அக்கூனிற்குள் அடங்கியிருக்கின்றதாம். ஆணிப்பொன் மாலையொன்றதற்குச் சூட்டப்போகின்றாளாம. அன்பொரு புறமும் கடமை யொருபுறமும் மன்றாடிநிற்கும் உள்ளத்தொருத்தி உரைகளோ இவை, பித்தி இவளென்றாலும் அதனுவெட்குப் புகழேயன்றி வேறென்ற. இமையவர் இழைத்த மாயத்தாலுழைக்கின்றாளிவள் என்று கம்பர்பிரான் கூறியதே இவளுடைய நிலைமைக்கு இப்பொழுது ஒக்கும்.

இன்னபடி தன்னைக்கொண்டாடிக் கொந்தளித்த பேதையை மந்தரை "தண்ணீரெல்லாம் ஓடிவிட்ட பிறகு அணைபோடுவதிற் பயனில்லை. ஆகையால் எழுந்திருங்கள்; உங்கள் க்ஷேமத்தைச்சீக்கிரம்நாடிக்கொள்ளுங்கள்; அரசனைச் சந்திக்கும் வழியைப்பாருங்கள்" என்று மேன்மேல் ஊக்கவும் அவள், "இவ்வண்ணம் உற்சாகப்படுத்தப்பட்டவளாயும், சௌபாக்கியத்தாலுண்டான மதத்தாற் செருக்குக் கொண்டவளாயும் இருந்தாள்" என்பார் வான்மீகி.

ஆதலின், கோபமும் மதமும் ஆசையும் சுழல்வரும் பித்துடைய மனத்தவளக் கைகேயி ஆயினாள் என்பதை யாது மையமில்லாவகை வடநூன் முனிவர் காட்டுகின்றா ரென்றபின் கற்பின் பெருந்தகைமையால் கொண்டோன்குறாங் கேடுறுவகைக் காத்தலே கடனாய்க் காட்டிற் கிராமனை போட்டிப் பரதனுக்கு மௌலிகவிக்குங் கருமத்தை யவள் கைக்கொண்டாளென இயம்புதற் கினி யோர்வழி யெங்குளது? கம்பரது கருத்தும் அதுவே யெனினும் இத்தமிழ்க்கவி அவளுடைய பித்தக்கூத்தை அத்துணை அவலமாய் விரித்தாடவைத்திலர். "எனக்கு நல்லையுமல்லை நீ பென்மகன் பரதன்தனக்கு நல்லையுமல்லை" என்று கூறி முதலிற்றெழித்தவள், "எனையுவந்தனை, இனியை என் மகனுக்கும்" என்று புரள்வதே கைகேயியின் புன்மைநிலையைப் புகல்வதற்குப் போதும் என நினைத்தார் கம்பர். "தரைக்கு நாயகன் தாயினி நீ" எனத்தணிந்து பரதனைக் கையடை கொடுக்குமிது, மந்தரையின்கூனிற்கு ஆணிப்பொன் மாலை சூட்டுதனிலும் மதியிழந்துழலும் இழுக்குப் பெரிதுடைத்து. "உலகம் ஏழுமேழும் உன்னொரு மகற்காக்குவேன்" என்ற மந்தரையின் உறுதிமொழி கேட்டவளவில் கைகேயி பொங்கிய உவகையால் பெருநகை புரிந்திருத்தல் வேண்டுமென, மந்தரை அவளை "நளிர்மணி நகையாய்" என்று அழைப்பதிலுள்ள அடைமொழிகளிலிருந்து ஊகிக்கலாம்.

வேறென்! உண்மையில் இக்கைகேயி மன்னவன் தன் வாய்மையறத்தையும் புகழின் தூய்மையையுமே மனத்திற்கொண்டு இக்கருமத்தைத் துணிந்திருப்பாளாயின், தன் கடமையின் இன்றியமையாமையையும், அக்கடமையைப் புரியப்புகுவதால் எல்லோரையுந் தான் ஆளாக்கவேண்டிய இன்றியமையாத் துயரங்களையும் மாறிமாறி எண்ணினளாய், இருதலைக்கொள்ளி எறும்புபோல் திரிந்துழலும் மனத்தொடு புழுங்குதற்குரிய நிலைமை யொன்றே அவளுக்கு இயற்கையாகும். இந்நிலையை இரு பெரும்புலவரும் அவள்பாற் காணாதது மன்றிச் செவ்வியொடு இயைபற்ற வெகுளியும் உவகையும் செருக்குமே திணிந்து நனி வீங்குமொரு சித்திரத்தைக் கைகேயியிற் கண்டனர்.



# நம்மாழ்வார் வைபவம்.

## திருவாய்மொழி.

[649-வது பக்கத் தொடர்ச்சி]

### 2-ம் பத்து 1-ம் தசகம்

ஒன்றாம் பத்தில் திருமாலின் பரத்துவத்தையும் ஜகத்காரணத்துவத்தையும் ஸ்தாபித்து அவன், ஸேவைக்கும் பக்திசெய்வதற்கும் யோக்கியனென்று ஆழ்வார் அறுதியிட்டார். பக்தியை ஏற்க அவனுக்கு ஸௌசீல்யம், ஸௌலப்பியம், ஸௌந்தரியம் முதலான திவ்வியகுணங்கள் அவசியமானபடியால் அவைகள் அவனுக்கு அஸாதாரணமாயிருப்பதை நிரூபித்தார். பக்தியால் அடையும்பொருள்சுகரூபமாயும் அநுபவத்தில் இன்பம் பயப்பதாயும் இருந்தாலன்றோ அப் பக்திநிலை நிற்குமென்றும், அடையப்படும் பகவானைவிட எத்துணையும் சீரிய பொருள் வேறொன்றுமில்லை என்றும் இப்பத்தில் ஸ்தாபிக்க ஆரம்பித்து இந்த முதல்தசகத்தில் பக்தர்களுக்கு அவனைவிட்டுப் பிரிதல் ஒரு க்ஷணமாத்திரமாயினும் துயர்தருமென்று அருளிச் செய்கின்றார்.

1-ம் பாசுரம்.

வாயும் திரையுகளும் கானல் மடநாராய்
ஆயும் அமருலகும் துஞ்சிலும் நீதுஞ்சாயால்
நோயும் பயலைமையும் மீதூர எம்மேபோல்
நீயும் திருமாலால் நெஞ்சம் கோட்பட்டாயே.

அவதாரிகை:-முன்தசகத்தில், ஆழ்வார் பகவானைப் பிரத்தியக்ஷமாய்த் தாம் பார்த்தாப்போல் தம் திருவுள்ளத்தாலே அநுபவித்தவராகி அக்கலவிவெளிப்புறத்திலும் கைவரவேண்டுமென்று ஆசைப்பட்டு முயன்றுவருகையில், அவ்வண்ணம்அது கைகூடாமையால்மனதில் கிலேசப்பட்டு அந்நியாயவுபதேசத்தால் தாம் ஒரு நாயகிபாவத்தை மேலிட்டுக்கொண்டு தம் துயரத்தை இந்தத் தசகத்தின் பாசுரங்களால் வெளிப்படுத்துகின்றார். இப்பாசுரங்களால் அவர் திருவடிக்கு அகப்பட்ட நாரை அன்றில் முதலான பக்ஷிகளும் மேகம் கடல் காற்று முதலான அசேதந வஸ்துக்களும் தம்மைப்போலப் பகவானுடன் கலவி கிடைக்காததினால்வருந்துவதாகத் தம் விரகக்கிலேசத்தால் பிரமித்து அவைகளைத் துணைகூட்டிக்கொண்டு தானும் அவைகளுடன் பகவானை யடையப் பெறாமையால் நோவுபடுகிறதாகப்பாடுகிறார். அந்த அந்த வஸ்துக்களின் இயற்கைக் குணங்களைக் கொண்டே அவற்றின் துக்கஹேதுக்களாகத் தம்திருவுள்ளத்தில் நிரூபித்து வர்ணித்து அவைகளைக் "குறித்து நீங்களும் என்னைப்போல் பகவானைப்பிரிந்த விரஹதுக்கத்தாலே நைகின்றீர்கள் அல்லீரோ"வென்று பரிகின்றார்.

இம்மஹான் முன் "அஞ்சிறைய மடநாராய்" என்னுந் தசகத்தில் பகவானுக்குத் தம் விரகத்தால் தூது அனுப்பினாரன்றோ. அத்தூதிற் கிணங்கிப் பகவான் "வளவேழுலகில்" தோற்றி மறப்பற மனத்தே மன்னி ஆற்றுவித்தாரன்றோ. அப்படி இருக்க மறுபடியும் விரஹப்படுவானேன் என்னின், "அஞ்சிறைய மடநாராய் என்னும் பாசுரத்தில் பகவானது அபராதஸஹித்துவத்தால் தம்மை ரக்ஷித்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தாரென்றும் இங்கு அவனது திவ்விய ஸௌந்தரியத்தில் ஈடுபட்டு அவனுடைய கலவி அதிமனோஹரமான உகப்பு வஸ்துவென்றும் ஒரு நிமிஷம் மாத்திரமும் அவனைப் பிரிந்திருப்பது துக்க ஹேதுவென்றும் கூறப்போகிறா ராகையாலே, இந்தச் சந்தர்ப்பம் பகவான் திவ்விய ரசவஸ்துவென்று தெரிவிக்கும் இலக்குடையதென்று நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

குறிப்பு:—பக்ஷிகள் திரியக் வஸ்துக்கள். இவைகளுக்கும் பகவத்சம்பந்த உளதாகையால் அவைகளுக்கு அவன் பிரிதல் துக்காவஹமென்று ஊஹிக்கக்கூடும். ஆனால் பகவான் இவைகளுக்கும் பரமபுருஷார்த்தமென்று நாம் காணவில்லையே என்றால், சாஸ்திரத்தால்தான் இந்தச் சங்கையைத் தெளிந்துணரவேண்டும். வியாஸபகவான் ஸமந்வயாதிகரணத்தில் இப்படியே ஸித்தாந்தம் செய்துள்ளார்.

பதவுரை:—வாயும்-பாய்ந்து அணுகிவரும், திரை-அலைகள், உகளும் - புரளும், கானல் - கடற்கரையிலுள்ள, மடநாராய் - மடப்பத்தையுடைய நாரையே! ஆயும் - உன் தாய் போன்ற ஸகிகளும், அமருலகும்-கண்கொட்டாமல் எப்பொழுதும் விழித்திருக்கும் தேவர்களும், துஞ்சிலும் - உறங்கினாலும், நீ துஞ்சாய் - நீ உறங்குகிறதில்லை. நோயும் - விரஹ வியாதியும், பயலைமையும் - ஒளிமழுங்கிய உன் நிறவேறுபாடும், மீதூர - மேலே படர, எம்மேபோல் - என்னையும் என் தோழியரையும்போல், நீயும் - நீயும், திருமாலால் - திருமாலினால், நெஞ்சம் - (உன்) மனதை, கோட்பட்டாயோ - அபஹரித்துக்கொள்ளப்பட்டாயோ!

"உருமீன் வருமளவும் வாடியிருக்கும்" கொக்கின் இனத்தைச் சேர்ந்த நாரை ஒரே எண்ணமுடையனதும் விவர்ணமான உடலும் கொண்டிருப்பது அதன் ஸஹஜ லக்ஷணம்.

---

2-ம் பாசுரம்.

கோட்பட்ட சிந்தையையாய்க் கூர்வாய அன்றிலே,
சேட்பட்ட யாமங்கள் சேராது இரங்குதியால்
ஆட்பட்ட எம்மேபோல் நீயும் அரவணையான்
தாட்பட்ட தண்துழாய்த் தாமம் காமுற்றாயே?

பொழிப்புரை:—"கூர்வாய வன்றிலே, அபஹரிக்கப்பட்ட நெஞ்சையுடையாய், நீண்டராத்திரிகளிலும் உறங்காது நீயும் என்னைப்போல் பெரியபெருமாள் திருவடிகளில் திருத்துழாயை ஆசைப்பட்டாயாகாதோ என்கிறான்" ஆறாயிரப்படி.

குறிப்புகள்:—கூர்வாய அன்றில் - விரஹத்தை அனுபவிக்கும் ஸதிகள் அன்றிலின் வாய்த்தொனியால் மிகவும் வருந்துவார்கள் என்பது தாத்பரியம் முன்பாட்டில் கொஞ்சம் அபஹிருதமாயிற்றென்றார். இப்பாட்டில் நெஞ்சத்தின்காரியமாய்ச் சிந்தை அவனிடத்தில் இழுக்கப்பட்டது என்கிறார்.

"சேராதே", - சயனித்துத் தூங்காதே என்பது பொருள். சேட்பட்டயாமம் - கால அளவில் விஸ்தாரமான யாமம் என்பதுஅர்த்தம். அன்றில் - இப்பக்ஷியே ஆரியரால் கிரௌஞ்சம் என்று அழைக்கப்

படுகின்றது —"யத் கிரௌஞ்ச மிதுனு மேகம் அவதி காம மோஹிதம்" என்று வால்மீகிபகவான் கூறியிருப்பதுபோல அன்றில்பக்ஷி தன் காதற்பேடையை விட்டுப்பிரிந்தால் கதறி அழுது இறந்துபடும்.

"யான் மானிடஜாதியில் பிறந்தவள். சுகம்போல் துக்கமும் ஸஹஜமென்று ஆற்றுதல்கூடும். அன்றிலே, உனக்கு அவ்வளவு ஞானமில்லையே. உனக்கும்என்னையை துயரம் வர வொண்ணாது" என்பது தாத்பரியம்.

அன்றில் விரஹத்தால் யாமங்கள் தோறும் அழுது இரங்கு மென்கிறாள். காமநோயுற்றவளும் யாமங்கள் தோறும் வருந்தி வாடுவாள்.

---

3-ம் பாசுரம்.

காமுற்ற கையறவோ டெல்லே இராப்பகல்
நீமுற்றக் கண்டுயிலாய் நெஞ்சுருகி யேங்குதியால்
தீமுற்றத் தென்னிலங்கை யூட்டினான் தாள்நயந்த
யாமுற்ற துற்றாயோ வாழி கனைகடலே!

பதவுரை:—கனைகடலே - சப்திக்கின்ற சமுத்திரமே, காமுற்ற - ஆசைப்பட்ட வஸ்துவை, கையறவோடு - இழந்ததாலே, இராப்பகல் முற்ற - இரவு பகல்முழுவதும், நீகண் துயிலாய்-நீ உறங்குகிறதில்லை. நெஞ்சுருகி ஏங்குதி - மனம்நரைந்து கதறுகின்றாய். இலங்கை முற்ற-இலங்கை முழுவதும், தீ-அக்நியை: ஊட்டினான் - மூட்டிய இராமபிரானுடைய, தாள் - திருப்பாதங்களை; நயந்த யாம் -ஆசைப்பட்ட நாங்கள், உற்றது உற்றாயோ - அடைந்த நோயை நீயும் அடைந்தாயோ. வாழி - சோகம் நீங்கி வாழ்வாயாக.

குறிப்புகள்:— யாமுற்றது - வாய்வார்த்தைகளால் சொல்லக்கூடாவண்ணம் மிகுகின்ற விசனத்தை ஏற்ற சொல்லால் கூறமுடியவில்லை என்பது தாத்பரியம்.

முற்ற தீ - ஸீதாந்வேஷன முடிவில் ஹநுமான் தீ வைத்தபோது இராவணன் பட்டணம் ஒருபாகமே தீப்பட்டது. இராமன்சரத்தால் அத்தீவு முழுவதும் வெந்தது.

தான் தேடும் காதலர் எங்கும் அகப்படாமையால் கடலுக்குக் "கையறவு" ஸம்பவித்ததென்பது தாத்பரியம்.

---

4-ம் பாசுரம்.

கடலும் மலையும் விசும்புந்துழாய் எம்போல்
சுடர்கொள் இராப்பகல் துஞ்சாயால் தண்வாடாய்
அடல்கொள் படையாழி அம்மானைக் காண்பான் நீ
உடலம் நோயுற்றாயோ ஊழிதோ றூழியே.

பொழிப்புரை:— என்னைப்போல் 'எங்குற்றாய் எம்பெருமான்' என்று கடலும் மலையும் விசும்பும் துழாவி யிராப்பகல் உறங்குகிறதில்லை. எம்பெருமானுடைய திருவாழியும் கையும் காண ஆசைப்பட்டுப் பெறுமை யாலே காலதத்துவமெல்லாம் உடல்நோயுற்றாய் ஆகாதோ, தண்வாடாய்" என்கிறாள்.

குறிப்புகள்:—பாரத யுத்தத்தில் "ஆழியும் கையும் காண ஆசைப்பட்டவர் பீஷ்மாசாரியார். தன்பிரதிஞ்ஞையை மீறிக்கூடக் கிருஷ்ணபகவான் அவருக்குத் சக்கராயுதத்தைத் தரித்து ஸேவை அளித்தார். பாரத யுத்தம் ஆரம்பிக்கும் முன்னர்ப் 'பீஷ்மர் கிருஷ்ணா நீ யார்பக்கம் போரில் சேரப்போகிறாய்' என்று வினவப் பகவான் "நான் ஆயுதம் எடுத்துப் போர்புரிய மாட்டேன். பாண்டவர் பக்கல் நிற்பேன்" என்றுரைக்கப் பீஷ்மர் நீ ஆயுதம் எடுக்கும்வரையில் நான் ஆயுதங்களால் பாண்டவப்படைகளைத் தொலைப்பேன்" என்றார். செப்பியதுபோலவே பீஷ்மர் தாம்ஸேனைபதியான தினத்தில் அர்ச்சுனனது தேர்குதிரைகளைத் தொலைத்து அவன் முடியையும் பாணங்களால் வாங்கி விடவே, ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுனனின் நிலையைக் கண்டு இனித் தான் ஆயுதம் எடுக்காலொழியப் பீஷ்மன் அர்ச்சுனனையும் வதம் செய்துவிடுவானென்று ஜநங்கள் நம்புவார்களென்று கருதிச் சக்கராயுதத்தைச்சங்கல்பத்தால் வருவித்துக் கையில் தரித்தார். இது அவசியப்பட்டுச் செய்யவில்லை. தன் வாக்குப் பொய்த்தாலும் அப்பரம பக்தனை பீஷ்மனது வாக்குப் பொய்க்கக்கூடாதென்ற எண்ணத்தால் பகவான் செய்த சூழ்ச்சி இது என்று அறிக.

---

5-ம் பாசுரம்.

ஊழிதோ றூழி யுலகுக்கு நீர்கொண்டு
தோழியரும் யாமும்போல் நீராய் நெகிழ்கின்ற
வாழிய வானமே! நீயும் மதுசூதன்
பாழிமையில் பட்டுஅவன் கண்பாசத்தால் நைவாயே.

பொழிப்புரை:— பூலோகமெல்லாம் நிறையும்படி இக்காலமெல்லாம் நின்று நீராயுருகுகிற வாழிய வானமே! நீயும் எங்களைப்போலே எம்பெருமானுடைய சேஷ்டிதங்களில் அகப்பட்டு அவன் பக்கலுள்ள ஆசையாலே இப்படி நைந்தாயோ என்கிறாள்"—ஆறாயிரப்படி.

குறிப்புகள்:— வாழியவானமே - பூலோகத்தை மழை பெய்து வாழ்விக்கின்ற மேகமே; அல்லது ஆழிய - ஆழ்ந்த கருணையுடைய மேகமே; அல்லது ஆழிய - ஆழ்கையைச் செய்கின்ற அதவாது, ரக்ஷண்யத்தை செய்யும் மேகமே; மதுசூதன் - கிருஷ்ணபகவானது, பாழிமையில் - பலம் அதாவது தோள்வலியில், பட்டு - ஈடுபட்டு, ஊழிதோ றூழி - பல யுகங்களாய், நைவாய் - உடைந்து நீராய் உருகுகின்றாய்.

குறிப்பு i:—மேகங்களுக்கு உரிய தொழிலுங் குணமும். நெகிழ்ந்துருகுதல். காதலரின் தோள்வலிமையால் சீதாப்பிராட்டியையும் உருக்குமணி பிராட்டியையும் காப்பாற்றியதுபோல் எங்களையும் காப்பாற்றும் பகவான் என்ற ஆசை இப்பிராட்டிக்கு இருப்பது போல் மேகங்களுக்கும் இருப்பதாகக் கருதிச் சொன்னதிது. இப்பாசுரத்தில் விளக்கிய விரஹ இலக்கணம் "மனமுடைந்து ஆசையால் நெகிழ்தல்." அது ஊழிக்காலமும் ஆறுதிருத்தல்.




## அரிய தமிழ்ப் புத்தகங்கள்.

| | | |
|---|---|---|
| சூளாமணி மூலம் (தோலா மொழித்தேவர்) | 2 | 8 |
| ௸ வசனம் ... ... ... | 1 | 0 |
| தமிழ் தமிழ் இங்கிலீஷ் அகராதி (வீரமா முனிவர்) ... ... ... | 2 | 8 |
| சதுரகராதி ... ... ... | 3 | 0 |
| தேம்பாவணி விருத்தியுரை ... ... | 6 | 8 |
| ஞான போதினி (3-வது தொகுதி) (1899-1900) பழைய மாதப் பத்திரிகை | 5 | 0 |
| சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ் ... | 0 | 10 |
| திராவிடர் மத்தியகாலக் கதைகள் ... | 1 | 0 |

புதிய பதிப்புக்கள்.

| | | |
|---|---|---|
| சோமேசர் முதுமொழி வெண்பா உரை (சிவஞான சுவாமிகள்) ... ... | 1 | 12 |
| சிவஞான சுவாமிகள் பிரபந்தம் (செய்யுள்) | 2 | 8 |
| ௸ வசனம் ... ... ... | 1 | 12 |
| குமரகுருபர சுவாமிகள் பிரபந்தம் ... | 3 | 8 |
| அந்தாதிக் கொத்து ... ... | 1 | 12 |
| பிள்ளைத் தமிழ்க்கொத்து ... ... | 3 | 0 |
| சைவசித்தாந்த உரைக் கொத்து ... | 2 | 0 |
| நீதிநூற் கொத்து உரை ... ... | 1 | 0 |
| நானூற்பது உரை ... ... ... | 1 | 8 |

விரிவான புத்தக விலைப்பட்டி இனும்:

**சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,**
6. பவளக்காரத் தெரு, சென்னை.

## கந்தபுராண வெண்பா

வெண்பாப் புலி வேலுசாமி அவர்களால் பாடப் பெற்றது தமிழரால் போற்றப்படுவதற் குரியது.

விலை ரூபா **4**. தபால் செலவு வேறு.

EDUCATIONAL PUBLISHING CO.
**Nungambakam, Madras.**

**Estd.** NATIONAL **1906**
**INSURANCE COMPANY LIMITED.**
*Head Office:*-**9, Old Court House St., Calcutta.**

INDIA'S PROBLEMS CAN ONLY BE SOLVED BY INDIANS

INSURE IN AN INDIAN COMPANY MANAGED BY INDIANS, FOR INDIANS

"NATIONAL" IS THE STRONGEST COMPANY MANAGED PURELY BY INDIANS

"NATIONAL" STANDS FOR INDIAN LIFE ASSURANCE

Low rates of premia. Invested Funds over **Rs. 1,47,000,00**

Prompt settlement of Claims. Claims paid exceed **Rs. 67,000,00**

*IT WILL PAY YOU TO ENQUIRE ABOUT AGENCY TERMS Please apply tothe Company to-day.*

**R. G. DAS & Co,** OR **K. S. GOPALAYYA**
*Managers.* *Branch Secretary,*
*Loane Square, Broadway,*
*Madras.*

# கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி

**பிரசுரங்கள்.**

### சங்க நூல்

சென்னைப்பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்
திருவாளர் - கா. ரா. கோவிந்தராஜ முதலியார்
எழுதியது.

தமிழின் அரும்பெரும் செல்வமாய் வாய்த்திருக்கும் சங்ககால இலக்கியங்களைக் கற்பவர்க்கு இணையிலாப் பேருதவி யளிக்கவல்ல இந்நூல் எவ்வெவர் மாட்டும் இருக்கவேண்டியது இன்றியமையாதது. முச் சங்கங்களின் வரலாறும், அவ்வச் சங்கங்களில் பாடப்பெற்ற நூல்களின் தன்மையும், இவையனைய பிறவும் இந்நூலின்கண் விளக்கிஇருக்கக் காணலாம். இத்தகைய அறிவினை யளிப்பதுடன் ஓதுதற்கும் நனி இனிது இந்நூல். தமிழ்ப்பற்றுடையவ ரனைவர் கையிலும் இந்நூலொன்று இல்லாமல் தீராது. சங்க நூல்களைப் படிக்க ஆரம்பிப்பதற்குமுன், இந்நூலைக் கற்றிருப்பாராயின், அச் சங்கநூல்களின் உண்மைப் பொருளையும், அழகையும், பயனையும் உணர்வது எளியதாகும். விலை ரூபா 1—4—0.

### கந்தபுராண வசனம்

வித்வான்
என். வி. முத்துகிருஷ்ண ரெட்டியாரவர்கள்
எழுதியது.

முருகப் பெருமானது திருவவதாரச் சிறப்பினை யுரைக்கும் கச்சியப்பசிவாசாரியார்தம் பெருங்காப்பியமாகிய கந்தபுராணச் செய்யுள்களைத் தழுவித் தெளிவும் இனிமையும் வாய்ந்த செந்தமிழ் வசனநடையில் எழுதப்பெற்றுள இந்நூல், முதனூலின் பெருமையிற் சிறிதுங் குறையாமல், தமிழழகு பூத்துச் சைவசித்தாந்த நறுமணம் வீசிப் பத்தித்தேன் சொட்டி ஞானங் கனிந்த வொரு கற்பகத் தருவிற்கு நிகராகு மென்பதிலையமில்லை. ஆறுமுகமுடைய அருட்பெறும் குமரவேளின் திப்பிய சரித்திரத்தைச் செய்யுள்வாயிலாக ஓதியுணர்ந்து அவர் கருணைக்கு ஆளாகவல்லார் சிலரேயாக, எத்தகையினோரும் எளிதில் படித்துத் தெரிந்து கொள்ளுமாறு வசனநடையில் வரைந்துள இந்நூல் தமிழரனைவர்க்கும் அருமருந்துபோல் அமைந்திருக்கின்றது. (கிளேஸ் பேபர்) விலை ரூபா 2—8—0.

**கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி**
திருவல்லிக்கேணி, :: :: சென்னை.

# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரீடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளைகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பையிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::




# வர்த்தமானம்

**சர்வ கலாசாலைப் பட்டவளிப்பு (Convocation).**

சென்றவாரம், கூடிய பட்டவளிப்புக் கூட்டத்தில் டாக்டர் சுப்பிராயன் நிகழ்த்திய உபந்நியாசச் சுருக்கம் வருமாறு:—

சர்வகலாசாலை நல்கிவைத்த பயிற்சியால் எய்த வேண்டிய குணநலச் சிறப்பை மாணவரனைவரும் தத்தமக்குரிய தனிவகையிற்பெற்று, அச் சர்வகலாசாலையின் கீர்த்தி குன்றுவண்ணமும், குணநலம் வளரும் வகையும், தங்கள் வாழ்நாளில் விவகரிக்கவேண்டும் என்னும் நோக்கமே உங்கள்பால் வேண்டப்படுவது. இத்தகைய நோக்கத்தைக் கடைப்பிடித்தவரே, "சர்வ கலாசாலை, தேசீய வாழ்க்கையின்பொருட்டுச் செய்துளதுயாது" என்று இந்நாள்எழுகின்ற வினவிற்குச் சரியான விடை தந்தவராவார். சர்வகலாசாலை, போதனை பெறுவதற் குரியவொரு விடம் அன்றென்றும், சமூகவாழ்க்கையில் சரியான ஸ்தானம் பெறுவதற்கானபடி மாணவர்களைச் செய்துவைப்பதே அதன் கடன் என்றும், சமீபத்தில் கல்விவளர்ச்சி விஷயமாய் ஆராய்ச்சிசெய்த ஹார்டாக் கமிட்டி கூறுவது முழுதும் உண்மையே. ஒரு நாட்டின் அரசியல் சீருடன் நடைபெறுவதற்குச் சர்வகலாசாலை செய்ய வேண்டுவது அதிகமுளது. எனவே நாட்டின் தலைவர்களாமாறு பயிற்றுவித்தலே சர்வகலாசாலையின்வேலை.

மாணவர்கள் தாம் கற்றதையும் கேட்டதையும் போக்கிலேபோகவிடாது நடைமுறையில் நிகழ்த்திக் காட்டவேண்டும். அதற்குரிய தைரியமும் அவர் பெற வேண்டும். தன் மனதிற்குச் சரியென்று தோன்றுமொன்றை ஊரார் பழிமொழிக்கு அஞ்சாது செய்தே தீரவேண்டும். சர்வகலாசாலைப் பட்டம் பெற்றவர் பலர் சாரதாச்சட்டத்தை யெதிர்த்ததுமல்லாமல் அதை இல்லாதும் செய்துவிடச் செய்கின்றமுயற்சி இரங்குவதற் குரியது. இந்நாளிலும் மூடப்பழக்கங்களிடம் நம்பிக்கைவைத்து விவகரிப்பது அறிவு வளர்ச்சியின் அடையாளமாகாது. பழைமை, பழைமை என்று வாயால் சொல்லிக்கொண்டிருப்பதில் பயன் ஒன்றுமில்லை. பழைமையில் இருக்கும் நல்ல அம்சங்களை எடுத்துக்கொள்வோம். திப்பிகளைத் தள்ளிவிட்டுக் காலதேச வர்த்தமானங்களுக் கேற்றவாறு புதியவைகளையும் புகுத்திக்கொள்வோம். அதுதான் முறையும் அறிவின் அடையாளமும் ஆகும். நீங்கள் தத்துவ நூல்கள் படித்திருக்கின்றீர்கள். ஒவ்வொரு மனிதனிலும், அவன் உயர்ந்தஜாதியானாகட்டும், அல்லது தாழ்ந்தஜாதியானாகட்டும், இருக்கின்ற ஆன்மா ஒன்றே யென்று நூல்கள் கூறுகின்றன. அங்ஙனமிருக்க ஆதித்திராவிடர்களைத் தெருவில் நடக்கலாகாதென்றும், கோயிலிற்குள் போகலாகாதென்றும் கூறுவது தர்மமாகுமா? எனவே மாணவர், பழக்கக் கொடுமையினின்று விலகிவிடவேண்டும்.

இவ்வருடம் மாதர்கள் பலர் பட்டம் பெறுவது காண நான் மகிழ்கின்றேன். இந்நாள்வரை ஆண்கள், பெண்களின் உரிமையான கல்வியைத்தராது அவர்களை அடிமைகளாய் வைத்திருந்தனர். சில பெருமக்களின் முயற்சியால் நமது பெண்கள் விழித்துக் கொண்டனர். இனிக் கற்றுத் தேர்ந்த மாதர்கள் தங்கள் சகோதரிகள் பலரும் கல்விப்பயனை யெய்தும்படி சமூகவேலையில் ஈடுபடவேண்டும்.

ஜாதியென்றும் மதமென்றும் உயர்ந்தவன் என்றும் தாழ்ந்தவன் என்றும் பூசலிட்டுப்பல இடையூறுகளை விளைத்து வருகையில் எப்படி நம்நாடு அரசியல்ஆதிய செல்வாக்குக்களைப் பெறலாகும் என்று கேட்கின்றேன். இவ்விடையூறுகளை விலக்கி எல்லோரும் மனிதன் என்ற கொள்கையில் நாம் காரியங்களைத் தைரியமாய்ச்செய்யாதவரையில் நம்நாட்டில்ஒற்றுமையும் கூட்டுறவும், அரசியல் முன்னேற்றமும் ஏற்படா.

நமது சர்வகலாசாலைகள், மாணவர்களெல்லாம், 'எம்மதத்தின ராயினும், எவ்வகுப்பின ராயினும் நாம் அனைவரும் சகோதரர்" என்ற நினைவுடன் வளர்வதற்குரிய பயிற்சியை யளிக்கவேண்டும். இந்நினைவுவளர்வதற்கு விளையாட்டிடங்களும், நெருங்கிப்பயிலும் சங்கங்களும் ஏற்ற விடங்களாகும். இவ்வழியிற் சர்வகலாசாலையினர் இன்னும் போதியவாறு முயற்சியெடுக்கவில்லை. படித்தவர் அனைவரும் அரசாங்க உத்தியோகத்தையே நம்பியிராது வியாபாரத் துறையிலும் கைத்தொழிலிலும் ஈடுபடவேண்டும்.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் சத் வைத்தியசாலை,

நஞ்சன்கூடபல்பொடி நஞ்சன்கூடு.

சோல் ஏஜண்ட்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்




குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
ஜீவஸுதா (Reg.)
பாதாமி ரசாயனம்
பிருங்காமலக தைலம்

டிப்போ., பம்பாய் கல்கத்தா

NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA, NANJANGUD

பிரான்சு: மதுரை காஞ்சீபுரம்.

ஜெனரல் ஏஜெண்ட்:-யுனைடட் கன்ஸர்ன் 54 பந்தர்தெரு, சென்னை.

KALANILAYAM.
REG. NO. M. 2324.


## பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமுக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும்,பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கப்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

| | | |
|---|---|---|
| உள்நாடு சந்தா | ரூபா | 2 0 0 |
| வெளிநாடு „ | „ | 2 8 0 |
| தனிப்பிரதி விலை | அணு | 0 4 0 |

விலாசம் :—'பாரதி' கார்யாலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.



## அமிர்த குண போதினி



5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும்,அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ. 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனும்.



## ஆங்கில ஆசான்




10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவா யிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்ந்துளது. 800-பக்கம். அழகிய ஸீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதாராஸ்.





காந்திக்கு ஜேய்!

கதர் சில்க் அங்க வஸ்திரம்.

சுத்த கதர் சில்க். கையினுல் செய்த பட்டு. 5 மு. பட்டு 1-க்கு ரூ. 3-8-0 மூந்துங்கள். 500 பட்டுகளே வந்திருப்பதால் உடனே ஆர்டர் செய்யுங்கள்.

ஸெண்ட்ரல் ஸ்டோர்ஸ்
373 எஸ்பிளநேடு, சென்னை.



## கம்பராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை மு. சடகோப ராமானுஜாசாரியார்,

சே. கிருஷ்ணமாசாரியார்,

வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

| | | | |
|---|---|---|---|
| பால காண்டம் | ... | ரூ. | 5. |
| அயோத்தியா காண்டம் | | ரூ. | 5. |
| ஆரண்ய காண்டம் | ... | ரூ. | 4. |
| கிஷ்கிந்தா காண்டம் | ... | ரூ. | 4-8. |
| சுந்தர காண்டம் | ... | ரூ. | 5. |

(வி பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.



## நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல்

சேர்மனுமாய

கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார், போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—"கலா நிலயம்",

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)